
முச்சந்தி முரளி



"ஜனாதிபதி தேர்தலில காரைக் காட்டிக்கூட நாலுபேரை கூட்ட முடியாத பொன்சேகா எப்பிடி இந்தத் தேர்தலில நிப்பார்?"

Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 322

ஞாயிற்றுக்கிழமை
13 ஒக்ரோபர் 2024

புரட்டாதி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் | மத்திய வங்கி மோசடி | தினேஷ் ஷாப்டர் மரணம் | ஊடகவியலாளர் சிவராம் கொலை

எஸ்.ரவீந்திரநாத் மரணம் | லலித், குகன் காணாமற்போனமை | வெலிகம பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு

# முக்கியமான வழக்குகளை விரைவாக விசாரியுங்கள்!

## பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்து

**கொழும்பு, ஒக்ரோபர் 13**

**சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவராம் படுகொலை, யாழில் லலித், குகன் ஆகியோர் காணாமற்போனமை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், பிணைமுறி விவகாரம் உட்பட சர்ச்சைக்குரிய முக்கியமான வழக்குகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.**

15

## வல்லைப் பாலத்தில் விபத்து; குடும்பத்தலைவர் உயிரிழப்பு

### பிள்ளைக்கு ஏடு தொடக்கிவிட்டு திரும்பியபோது பரிதாபம்

யாழ்ப்பாணம், ஒக். 13



யாழ்ப்பாணம் - வல்லைப் பாலத்துக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். தனியார் நிறுவனமொன்றில் முகாமையாளராகக் கடமையாற்றும் துரைலிங்கம் மலைமகன்

15

## பிரம்படிப் படுகொலைகள்: அஞ்சலி உணர்வுபூர்வம்

இந்திய அமைதிப்படையால் கொக்குவில் பிரம்படியில் கொல்லப்பட்ட உறவுகளின் 37ஆவது நினைவுதினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

(விரிவு: பக்.14)

## வலி.வடக்கில் நாளை கையெழுத்துப் போர்!

மதுபானசாலைக்கு எதிராக வலி.வடக்கில் நாளை கையெழுத்துப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

(விரிவு: பக். 3)

## கனேடியத் தூதுவர் எரிக் தீவக மக்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வால்ஷ் யாழ்ப்பாணம் - புங்குடுதீவுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

15

## அபாயமாக மாறும் வல்லைப்பாலம்

### நடவடிக்கை தேவையென பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணம் - வல்லைப் பாலத்தில் விபத்துகள் அதிகரித்து வருகின்றன என்றும், இது தொடர்பில் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

15

## பொலிஸ் அலுவலரின் வீட்டில் நகை மற்றும் பணம் திருட்டு!

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணம் - நவாலி பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது வீட்டில் நகைகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பன நேற்றுமுன்தினம் இரவு திருடப்பட்டுள்ளன. வீட்டின் குளியலறை ஊடாக உள்நுழைந்த திருடர்கள், ஆறரைப் பவுண் நகை மற்றும் 29 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலை

15

வேட்புமனு தாக்கல் செய்தபின்

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் உச்சக்கட்டக் குழப்பநிலை!

### அஜித் மான்னப்பெரும விலகல்

கொழும்பு, ஒக். 13

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகுவதாகவும், மக்கள் எவரும் தனக்கு வாக்களிக்கவேண்டாம் என்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான அஜித் மான்னப்பெரும அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர், அஜித் மான்னப்பெரும தனக்கு வாக்களிக்க வேண்டாம் என்று தன்னுடைய ஆதரவாளர்களைக் கோரியுள்ளமை

15

## டெங்கு அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 13

நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் 40 ஆயிரத்து 494 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள்

15



## பொதுத்தேர்தலில் பொன்சேகா இல்லை

கொழும்பு, ஒக். 13

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்ததாகவும் இதனால் தான், தான் போட்டியிடவில்லை என்றும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல்

15


சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குத் தொழிலாளர்களின்

# அடி மடியில் கைவைக்கும் எல்லை தாண்டிய மீன்பிடி

*கலைப்பீடாதிபதி ரகுராம் சீற்றம்*

யாழ்ப்பாணம், ஒக். 13

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி வரும் தமிழக மீனவர்களின் இழுவை மடி மீன்பிடி நடவடிக்கையின் மூலம் எமது கடல் வளம் சுரண்டப்படுவதுடன் வடக்கு கடற்றொழிலாளர்களது அடிநாதத்தையே சிதைத்து வருவதாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக் கழகத்தின் பொன் விழா ஆண்டை முன்னிட்டு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் ஏற்பாட்டில், கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்ற வட மாகாண மீனவர் சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பானசெயலமர்வில்பங்கேற்றுஉரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது கடல் வளம் அதிகமாக சுரண்டப்பட்டு வருகிறது. தமிழக மீனவர்கள் எமது உறவுகளாக இருந்தாலும் அவர்களின் வணிக நோக்கிலான மீன்பிடி நடவடிக்கை குறிப்பாக அதிக பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன - இவ்வாறு எல்லை தாண்டி மேற்கொள்ளப்பட்டு வரும் இழுவை மடி தொழில் மூலம் எமது கடல் வளம் பெரும் அழிவுக்குள்ளாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களது அடிநாதமே சிதைக்கப்பட்டு வருகிறது - என்றார். (ஒ-100)

# சமஷ்டிக் கட்டமைப்பை வகுக்கும் பலத்தைத் தடுக்க வேண்டும்!

*சரத் வீரசேகர தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், ஒக். 13

**நாடு சமஷ்டிக் கட்டமைப்புக்கு மாறுவதைத் தடுக்க வேண்டுமெனில் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைப்பதைத் தடுக்கவேண்டும். அதற்காகவே நாம் போட்டியிடுகின்றோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

2015 நல்லாட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்ட அரசமைப்பு இறுதிப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி கூறியுள்ளார். எமது நாடு மதச் சார்பற்ற நாடாக இருக்கவேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் அரசமைப்பின் 9 ஆவது சரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும்.

எனவே, இதனைச் செய்வதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் அவர்களுக்குக் கிடைப்பதைத் தடுக்க வேண்டும். எமது நாட்டில் பொலிஸ், காணி அதிகாரங்களைப் பகிர்ந்து நாட்டை சமஷ்டியாக்குவதற்கு எந்த ஜனாதிபதியும் இடமளிக்கவில்லை. அதனை ஜனாதிபதி அநுர செய்ய முற்பட்டால் அதனையும் தடுக்கவேண்டும்.

அதேபோல ஒற்றையாட்சி மற்றும் பௌத்தத்துக்குரிய முன்னுரிமையில் கைவைப்பதற்கு நாம் இடமளிக்க மாட்டோம் என்றும் அவர் குறிப்பிடடார். (ச-44)



# பலசரக்குக் கடையில் போதைப்பொருள்

*சந்தேகநபர் கைது*

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக யாழ். போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து நடத்திய தேடுதலில் பலசரக்குக் கடையில் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கடையின் உரிமையாளர் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இணுவில் வீதி, மானிப்பாயில் பலசரக்குக் கடையின் உரிமையாளர் போதைப்பொருள் விற்பனை செய்வதாக புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய புலனாய்வு பிரிவினரும் போதைபொருள் தடுப்புப் பிரிவினரும் ஒருவரைக் கைது செய்து விசாரித்தபோது, போதை மாத்திரை பயன்படுத்துவதாகவும் தெரிந்த நபர்களுக்கு விற்பனை செ ய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவரது கடையின் பின்பகுதியில் இவருடை கடையின் பின் பகுதியில் போதைமாத்திரைகள் இருந்துள்ளன. இதனையடுத்து 24 வயதான அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-20,26,27)

# தமிழர்களுக்கு வழிகாட்டியாக நான்தான் இருந்திருக்கிறேன்

*டக்ளஸ் கருத்து*

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு நான் சரியான வழிநடத்தலையும் வழிமுறையையுமே வழங்கி வருகின்றேன். அதனால்தான் எனது அனுபவமும் தூரநோக்குள்ள சிந்தனையும் இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது என ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருவருக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கும் போது அனுபவம் அருகில் இருப்பது அவசியம். அந்தச் சிறப்பான அனுபவம் எம்மிடம் இருக்கின்றது. தற்போது மாற்றம் என்ற கருப்பொருளை மையப்படுத்தியே அநேகமானோர் பரப்புரைகள் செய்கின்றனர். குறிப்பாக மக்கள் விரும்பும் மாற்றம் என்பது அரசியல் மாற்றமாகவே இருக்கின்றது. அந்த மாற்றம் தற்போது மத்தியில் ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் தற்போது நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலிலும் அந்த மாற்றம் வரவுள்ளதாக கணிக்கப்படுகின்றது. இதேவேளை எமது வழிமுறையே சாத்தியமானது என்பதும் இன்று நிரூபணமாகியுள்ளது. அந்த அனுபவத்தினூடாகத்தான் இம்முறை மக்கள் மத்தியில் உருவாகியுள்ள அரசியல் மாற்றம் ஈ.பி.டி.பி.யின் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்தும் என நம்புகின்றேன் - என்றார். (ஒ-27)

# விதை நெல்லுக்கு திடீர்ப் பற்றாக்குறை

யாழ். குடா நாட்டில் விதை நெல்லுக்கு திடீர்ப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. பெரும் போக நெற்செய்கையை ஆரம்பிப்பதற்கு விதை நெல் இன்றி விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

பி.ஜி. 406 இன விதை நெல்லுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. (ஒ-25, 17)

# விருப்பு வாக்குக்கு அமைவாகவே தெரிவு

*தேசிய மக்கள் சக்தி தெளிவுபடுத்துகிறது*

வவுனியா, ஒக். 13

நாடாளுமன்றத் தேர்தலில் விருப்புவாக்கின் அடிப்படையிலேயே வெற்றி பெற்றவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். எனவே அதில் மக்கள் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. தேசியமக்கள் சக்தியின் வேட்பாளர்கள் வவுனியாவில் தமது வேட்பு மனுவை நேற்றுமுன்தினம் தாக்கல்செய்தனர். இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினர். இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்து இனங்களையும் உள்ளடக்கிய சக்திமிக்க வேட்பாளர் அணி வன்னியில் களம் காண்கின்றது. ஜனாதிபதியின் வழிகாட்டலில் ஊழல் மோசடி ஏனைய துஷ்பிரயோகங்கள் அற்ற நேர்மையான ஆட்சியை அமைப்பதற்கு நாங்கள் ஒன்று திரண்டுள்ளோம். மக்களின் ஆணைக்காக நாங்கள் காத்திருக்கின்றோம்.

தேசியமக்கள் சக்தியில் விருப்பு வாக்கு முறைமை பார்க்கப்படாது என்று கூறுவது போலியான ஒரு கருத்துருவாக்கமே. இம்முறை விருப்பு வாக்கின் அடிப்படையில் தான் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். என்றனர். (ஒ-110)

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேம்

*கூறுகிறார் குருசாமி*

யாழ்ப்பாணம், ஒக். 13

வடக்கில் உள்ள ஒன்றரை இலட்சம் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் தீர்வைப் பெற்றுக் கொடுப்போம் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைப்பாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்:-

அராலியில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியத்திலே பயணித்துக் கொண்டிருக்கின்ற மக்கள் தென் இலங்கை வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் தேசியத்தை உறுதி செய்ய முடியும் என்ற தவறான கருத்தை கடந்த மாதம் தமிழ் மக்களிடையே பரப்பித் திரிந்தவர்களை நிராகரித்து, ஒட்டுமொத்தமாக தமிழ்த் தேசியத்தின் எழுச்சியை நீங்கள் முன்னெடுத்துச் செல்வதற்கு, சங்குச் சின்னத்தில் களமிறங்கியுள்ள ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழ்த் தேசத்தின் திரட்சியையும், இன விடுதலை வேட்கையையும், சமாந்தரமாக எங்களது அபிவிருத்தியையும் உறுதி செய்ய முடியும்.

அதுபோல வடக்கு மாகாணத்தில் பிரதான தொழிலாக கருதப்படுகின்ற, ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட கடல் தொழிலாளர்கள் அனுபவிக்கின்ற பிரச்சினைகளை நாங்கள் நிச்சயமாகத் தீர்த்து வைப்போம் - என்றார். (ஒ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாதனையாளருக்கு மகத்தான வரவேற்பு

கிளிநொச்சி, ஒக்.13

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற 17 வயது கைப் பந்துப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய அணியினருக்கு பாடசாலைச் சமூகத்தினரால் கடந்த வியாழக்கிழமை மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. நிகழ்வில் பாடசாலை அதிபர், பிரதி அதிபர் அயற்பாடசாலை அதிபர், அக்கராயன் பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் கலந்து கொண்டனர். (ச-25)

## ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு காலத்தின் தேவைகருதிய முயற்சி

*தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் கலாநிதி பத்மதயாளன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 13

ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு காலத்தின் தேவை என்று தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீன முதல்வர் கலாநிதி வேலுப்பிள்ளை பத்மதயாளன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சையாக போட்டியிடும் ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் நேற்று மாலை தென்னிந்திய திருச்சபையின் யாழ் ஆதீன முதல்வரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இதன்போதே, ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு உருவாக்கியமை காலத்தின் தேவை கருதிய முயற்சி என்று ஆயர் பத்மதயாளன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுடைய செயற்பாடுகள் பொருத்தமற்றுக் காணப்படுவதாலும் போதிய வெளிப்படைத்தன்மை இல்லாத காரணத்தாலும் புதிய கட்டமைப்பு மக்களால் வரவேற்கப்படுகிறது. அதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் என சமுதாய விழிப்புணர்வை விரும்பும் தலைவர்கள் இருப்பதை பாராட்டுகிறோம். பேராயராக ஒரு விடயத்தை கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் மக்களின் வாழ்வியலுக்காக இதய சுத்தியுடன் பாடுபடும் எந்த தலைவனையும் நான் உண்மையிலேயே தலைவணங்குகிறேன். ஏனென்றால் அது காலத்தின் தேவை. எமது மக்களின் வாழ்வியலை பாதுகாக்க புதிய கட்டமைப்பு உண்மையிலேயே பாடுபடும் என எதிர்பார்க்கிறேன்.

வாக்காளர்கள் யாரையும் எதிர்க்க வேண்டும் எனக் கூறவில்லை. மாற்றத்தை உணர்ந்தும் உண்மைகளை உணர்ந்தும் வாக்களிக்க வேண்டும். இது எமது தலையில் விழுந்துள்ள பெரும் பொறுப்பு. இந்த கூட்டமைப்பு சிறந்து விளங்கி நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்துக்கும், உண்மைக்கும், நீதி நியாயத்தை வெளிப்படுத்தி தமிழ் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்து சகோதர சிங்கள முஸ்லிம் இனங்களுடனும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றார்.

குறித்த சந்திப்பில் ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு வேட்பாளர்களான ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி.தவராசா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வடக்கு மாகாண முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், விமலேஸ்வரி, நாவலன், குணாளன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-125)



## மதுசாலைகளைத் திறக்காதே

# வலி. வடக்கில் நாளை கையெழுத்துப் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஒக்.13**

**வலி.வடக்கு பிரதேசத்தின் தையிட்டி, தெல்லிப்பழை கிராமங்களில் புதிய மதுபானசாலையைத் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மதுபானசாலைகளைத் திறப்பதற்கான அனுமதியை உடன் இரத்துச் செய்யவேண்டும் எனக் கோரி நாளை திங்கட்கிழமை வலி. வடக்கு சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.**

போராலும் இடப்பெயர்வுகளாலும் பாதிக்கப்பட்டு கடுமையான நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்து வந்த வலி.வடக்கு பிரதேசம் படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்புகிறது. இந்தநிலையில் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் மதுபானசாலைகள் திறக்கப்படுகின்றன. 'குடி குடியைக் கெடுக்கும்' பிரபல பாடசாலைகளையும், பண்பாடுகளையும் கொண்டுள்ள இந்தப்பிரதேசத்தில் மதுபானசாலைகளைத் திறப்பது தீங்கானது. எனவே மதுபானசாலையை திறப்ப தற்கான அனுமதியை உடன் நிறுத்த வேண்டும் என்றும் வலி.வடக்கு சிவில் சமூக அமையம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## மணிவிழா

*யாழ்ப்பாணம், ஒக். 13*

*வரணி மத்திய கல்லூரி அதிபர் ஆ.தங்கவேலுவின் மணிவிழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு வரணி மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் தென்மராட்சி கல்வி வலய முன்னாள் பிர திக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ச-159)*



## விமானப்படையினால்

# மயிலிட்டி கலைமகளுக்கு புதிய கட்டடம் கையளிப்பு

கொழும்பு, ஒக்.13

இலங்கை விமானப்படையினால் யாழ்ப்பாணம் வடக்கு, மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்துக்கு புதிய கட்டடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப் பட்டுள்ளது.

இலங்கை விமானப்படை 73 வது வருடத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட நட்பின் சிறகுகள் எனும் அமைப்பின் கீழ் “என்னிடமிருந்து வடக்கிற்கு ஒரு புத்தகம்” எனும் செயற்றிட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணத்தில் 73 பாடசாலைகளை புனர்நிர்மானம் செய்தல் 73 ஆயிரம் புத்தகங்களை பாடசாலை மாணவர்களுக்காக வழங்குதல், 73 ஆயிரம் மரக்கன்றுகளை வட மாகாணம் முழுவதும் நடுதல் ஆகிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த வகையில் யாழ்ப்பாணம் மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்துக்கு புதிய கட்டடமொன்று அமைத்து நேற்று வெள்ளிக்கிழமை இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்சவால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதித்துவத்துக்கு ஆபத்து

### ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வு அறிக்கையில் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 13**

**சிறுபான்மைக் கட்சிகளின் நாடளுமன்ற பிரதிநிதித்துவம், வரவிருக்கும் தேர்தல்களில் பிளவுபட்டு பலவீனமடையும் அபாயத்தில் உள்ளது, இது சிறுபான்மையினரின் உரிமைகளை திறம்பட அரசியலில் ஈடுபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் அவர்களின் திறனைப் பாதிக்கும் என ஒக்ஸ்போர்ட் பலக்லைக்கழக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.**

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

இலங்கையின் பிரதான தேசியக் கட்சிகளில் உள்ள சிறுபான்மை அரசியல்வாதிகள் பெரும்பாலும் தனிமைப்படுத்தப்பட்டு சிறுபான்மையினரின் உரிமைகள் பிரச்சினைகளை எழுப்புவதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளன.

தேசியக் கட்சிகள் இப்போது தங்கள் சிறுபான்மை வேட்பாளர்களை நிறுத்துவதைவிட சிறுபான்மைக் கட்சிகளுடன் கூட்டணியை உருவாக்க விரும்புகின்றன.

முஸ்லிம் மற்றும் மலையக சமூகத்தைச் சேர்ந்த சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க விரும்புகிறார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் சமூகத்துக்கு ஏதாவது செய்ய இதை ஒரு வாய்ப்பாக பார்க்கிறார்கள். வடக்கில், வாக்காளர் தளம் சிதைந்துள்ளது. மூன்றில் ஒரு பகுதியினர் தங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து செயற்பட விரும்புகிறார்கள்.

மேலும் மூன்றில் ஒரு பகுதியினர் எதிர்முனையில் உள்ளனர். தேசியத்துடன் இணைந்து பயணிக்க விரும்பவில்லை. புலம்பெயர்ந்த தமிழ்க் குழுக்கள் தேசியத்துடன் இணைந்து பயணிக்க விரும்பாத குழுவில் செல்வாக்குச் செலுத்துவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. அதே நேரத்தில் தேசியக் கட்சிகளால் நிறுத்தப்பட்ட சில வேட்பாளர்கள் மக்களிடையே செல்வாக்குச் செலுத்துகிறார்கள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## ஆடத்தெரியாதவனுக்கு மேடை கோணலாம்!

### ஹந்துனெத்தி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.13

பொதுத்தேர்தலில் தோல்வி உறுதி என்பதாலேயே விமல் வீரவன்ஸ போட்டியிடுவதில் இருந்து விலகியுள்ளார் என்றுதேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

மக்கள் தம்மை நிராகரித்துவிட்டனர் என்பதனாலேயே தேர்தலில் இருந்து அவர்கள் ஒதுங்கியுள்ளனர். தோல்வியால் ஒதுங்கும் அவர்கள், அதற்காகக் கூறும் காரணங்கள் நகைப்புக்குரியவை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## அநீதி! அநீதி!

### தமிதா குமுறல்

கொழும்பு, ஒக்.13



பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் இரத்தினபுரி மாவட்டத்தில் நடிகை தமிதாவை களமிறக்க விருப்பதாக அறிவிக்கப்பட்ட நிலையில் கடைசி நேரத்தில் வேட்பு மனுவில் இருந்து அவரின் பெயர் நீக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நடிகை தமிதா அபேரத்ன தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித் பிரேமதாஸவுக்காக பெரும்பாடுபட்டு பிரசாரங்களில் ஈடுபட்டேன். ஆனால் பொதுத்தேர்தலில் எனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கட்சித் தலைவர் நீதியைப் பெற்றுத்தர வேண்டும். - என்றார். (ச-44)

## சலுகைகளுக்காக விலைபோகோம்

### கூறுகிறார் செல்வம்

வவுனியா, ஒக். 13

வன்னியில் எமது அணி சார்பில் போட்டியிடும் அத்தனை பேரும் விடுதலைக்காக போராடியவர்கள். அந்த விடுதலையை அஹிம்சை வழியில் பெறுவதற்காக போட்டியிடுகின்றோம். அற்ப சலுகைகளைகளுக்காக நாங்கள் துணை போக மாட்டோம். தமிழ் மக்களுக்கு தலைமை தாங்குவதற்கு நாங்கள் இருக்கிறோம். இனத்தின் விடுதலையை நோக்கிச் செல்லும் சின்னமாக சங்குச் சின்னம் இருக்கின்றது. இவ்வாறு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கூடுதலான ஆசனங்களை பெறாது. தமிழர்களாகிய நாங்கள் அதிக ஆசனங்களை இனத்தின் சார்பாக வெல்கின்ற போது நிர்ணயிக்கும் சக்தியாக மாறுவோம். எமது கூட்டமைப்பு இந்த தேர்தலில் 11 ஆசனங்களை பெறும். 10 ஆசனங்கள் மக்களால் தெரிவு செய்யப்படும் என்பதுடன் தேசிய பட்டியலில் ஒரு ஆசனம் கிடைக்கும். பதினொரு ஆசனங்களை கொண்டு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுப்போம் - என்றார். (ஓ-18,110)

## அநுரவுக்கு டக்ளஸ் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 13

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வட பகுதி மக்கள் நலன் கருதி முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பில் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

அதில், கடந்த காலத்தில் எம்மால் இனங்கண்டு, பரிந்துரைத்து, அனுமதிபெறப்பட்டு ஆரம்பிக்கப்பட்டு, தொடரப்பட வேண்டிய மற்றும் ஆரம்பிக்கப்படுவதற்குத் தயார் செய்யப்பட்டிருந்த குறுகிய காலமற்றும் நீண்டகால வேலைத் திட்டங்கள் பல உண்டு என்பதை அவதானத்துக்குக் கொண்டுவருகிறேன்.

அதற்கு அமைவாக 33 விடயங்களை அந்தக் கடிதத்தில் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-27)

## முன்னைய ஆட்சியாளர்களைவிட ஜே.வி.பி. மிக மோசமானது

### சாடுகிறார் சுகாஷ்

யாழ்ப்பாணம், ஒக். 13

கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்களை விட ஜே.வி.பி. அரசாங்கமானது மிகவும் மோசமானது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பி. அதாவது தேசிய மக்கள் சக்தியின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தமிழ் மக்களுக்குச் சார்பாக ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட எந்தப் பிரேரணைகளையோ, போர்க் குற்ற விசாரணைகளையோ அல்லது இனப்படுகொலை விசாரணைகளையோ நாங்கள் முன்னெடுக்க மாட்டோம் எனக் கூறியுள்ளார். இது ஆச்சரியமான ஒரு விடயம் அல்ல. ஆனால் ஜே.வி.பி.க்கும், என்.பி.பி.க்கும் பின்னால் செல்லுகின்ற தமிழர்கள் ஒரு கணம் சிந்திக்கவேண்டும். ஜே.வி.பி.யினுடைய கடந்த காலச் செயற்பாடுகளை எமது மக்கள் மிகத் தெளிவாக உணர வேண்டும்.

கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்களை விட ஜே.வி.பி. எவ்வளவு பயங்கரமானவர்கள் என சிந்தித்துப் பார்க்க வேண்டும் - என்றார். (ஓ-27)

## விடுதலைக் கூட்டணி தெற்கிலும் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 13

தமிழர் விடுதலைக் கூட்டணி ஆனது வடக்கு கிழக்குக்கு அப்பால் தெற்கிலும் போட்டியிடவுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மற்றும் மலையக பகுதியில் தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்திலே நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-113)



## அநுரவுக்கு விமல் ஆதரவாம்

கொழும்பு, ஒக்.13

பொதுத்தேர்தலில் தேசிய சுதந்திர முன்னணி தனித்தோ அல்லது கூட்டணியாகவோ போட்டியிடாது என்று அக்கட்சியின் தலைவர் விமல்வீரவன்ஸ அறிவித்துள்ளார்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்கும் வகையில் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தொழில் முயற்சியாளர் திலித் ஜயவீரவை விமல் வீரவன்ஸவின் கட்சி ஆதரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'வர்ண இரவு' கௌரவிப்பு

மன்னார், ஒக்.13

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில், மாவட்டத்தில் சகல துறைகளிலும் சாதனை படைத்த மாணவர்களையும், ஊக்குவித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் 'வர்ண இரவு' நிகழ்வு மன்னார் நகரசபை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

உதவி மாவட்ட செயலாளர் வை.பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக பிரதேச செயலாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 56-60)



அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன. (ச-25,9)



# மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு யாழ்.மாவட்டத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.13

மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ். பதில் மாவட்ட செயலர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலக அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. கலந்துரையாடலில் ஜப்பான் ஜெ.ஐ.சி.ஏ. திட்ட இணைப்பாளர் சிமிஸி டக்காச்சி, சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர்கள், மாவட்ட மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,27,66)

# காலபோக செய்கைக் கூட்டம்

முல்லைத்தீவு, ஒக்.13

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வருடாந்த காலபோகச்செய்கைக்கான விதைப்புகள் ஆரம்பமாகியுள்ளன. அந்தவகையில் முத்து ஐயன் கட்டு பெரியநீர்பாசன திட்டத்துக்கான காலபோக நெற்செய்கைக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலர் தலைமையில் நீர்பாசன திணைக்களத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது கமலநலசேவை நிலையத்தில் விற்கப்படும்விதைகளில்தேவையானவற்றை விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. (ச-25, 500)



# ஆசிரியர் தின நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஒக்.13

வடமராட்சி, வல்வை மகளிர் கல்லூரியின் ஆசிரியர்தின விழா பாடசாலை மாணவத் தலைவியின் தலைமையில் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. இதன்போது ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், விவாத மேடை நிகழ்ச்சி போன்றன இடம்பெற்றன. நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25,27)



நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களாலும் மூன்று மாதங்களுக்கு முன்னர் வேம்பு, புளி, நாவல், இலுப்பை விதைகள் சேகரிக்கப்பட்டு கடந்த புதன்கிழமை அரியாலை பூம்புகார், உதயபுரம் அரச காணிகளில் விசிறப்பட்டு விதைக்கப்பட்டன. (ச-66)



# தேசிய மட்ட கைப்பந்துப் போட்டி பரந்தன் இந்து ம. வி. 2 ஆம் இடம்

கிளிநொச்சி, ஒக்.13

அம்பாந்தோட்டை ராஜபக்ச மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்று முடிந்த தேசிய மட்ட கைப்பந்து இறுதிப் போட்டியில் 20 வயதுப் பிரிவுக்கான பெண்கள் அணியில் கலவல சென். அன்ரனிஸ் கொலிஜ் அணியை எதிர்த்துப்போராடி கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயம் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. பின்தங்கிய பகுதியில் பௌதீக வளப் பற்றாக்குறை யுடன் இயங்கும் இந்தப் பாடசாலையின் மாணவர்கள் பாடசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். (ச-25, 113)




# பிரியாவிடை

கொடிகாமம், ஒக். 13

கைதடி குருசாமி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர் ந.ஜெயரூபனுக்கான பிரிவுபசார நிகழ்வு பாடசாலைச் சமூகத்தினரின் ஏற்பாட்டில் அதிபர் ச.அகிலன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. (ச-25, 159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரில் மானம்பூ உற்சவம்







படங்கள்: ஐ. சிவசாந்தன்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் நவராத்திரி கும்பபூஜை இறுதி நாளான நேற்றுக் காலை மானம்பூ உற்சவம் இடம்பெற்றது. (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகளால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். மகிழ்ச்சி ஏற்படும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்கவும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பரபரப்பாகச் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. நண்பர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி ஏற்படும். தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. செலவு செய்யவேண்டி வரும். வியாபாரம் வழக்கம் போலவே இருக்கும். சிவபெருமானை வழிபட ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.



## நடன ஆற்றுகை

யாழ்ப்பாணம், ஒக்.13

புகழ்பூத்த யாழ் ஏழிசை மிருதங்க நர்த்தனாலய அதிபர் நுண்கலைமாணி திருமதி பாலினி கண்ணதாஸின் மாணவியும், நல்லையெம்பிரான் திருக்கோவில் பிரதம குருக்களான வைகுந்தவாசக்குருக்கள்,யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாதனா தம்பதிகளின் புதல்வியும், யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட புதுமுக மாணவியுமான காயத்திரியின் பரத ஆடல் அரங்கேற்றம், யாழ். கலாசார மத்திய நிலையத்தில் கடந்த சனிக்கிழமை மிகச்சிறப்பாக நடந்தேறியது.

யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி வாசுகி ரவிராஜன் தலைமையில் நடைபெற்ற அரங்கேற்ற நிகழ்வில்,மஹாதேவ சோமசுந்தரக்குருக்கள் ஆசியுரை வழங்கினார். பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் பத்மநாபக்குருக்கள் கோபால கிருஷ்ண ஐயர் , சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஸ்ரீ சற்குணராஜா, முன்னாள் துணைவேந்தர்களான பொ.பாலசுந்தரம் பிள்ளை , நா.சண்முகலிங்கம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி துஷ்யந்தி துஷீகரன், யாழ். பல்கலைக்கழக நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சீதாலஷ்மி பிரபாகரன் மற்றும் கௌரவ விருந்தினராக கலாலயா அதிபர் நீலா தயாபரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-25)

## கால்நடைகளை கட்டி வளர்க்கவும்

யாழ்ப்பாணம், ஒக். 13

கோப்பாய், நீர்வேலிப் பிரதேசத்தில் உள்ள மக்கள் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும் என்று கமக்கார அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தப் பகுதிகளிலுள்ள வயல் நிலங்களில் பெரும்போக நெற்செய்கைக்கான நெல் விதைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிலர் தமது கால்நடைகளை வயல் நிலங்களை அண்டிய பகுதிகளில் மேய்ச்சலுக்காக விட்டுச் செல்கின்றனர். இதனால் அவை வயல் நிலங்களுக்குள் புகுகின்றன. எனவே கால்நடைவளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்காவிடின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கமக்கார அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (ச-17)

## கராத்தேப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.13

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான கராத்தேப் போட்டி கிளிநொச்சியிலுள்ள வடமாகாண விளையாட்டுக் கட்டடத்தொகுதில் நேற்றுச்சனிக்கிழமை ஆரம்பமாகி நாளை 14 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.

ஒன்பது மாகாணங்களிலும் வெற்றி பெற்ற 900 மாணவர்கள் போட்டியில் கலந்து கொள்வர். ஆண், பெண் என 16, 18, 20 என மூன்று வயதுப் பிரிவுகளில் தனிக்காட்டா, குழுக்காட்டா , சண்டைக் காட்டா எனப் போட்டிகள் நடைபெறவுள்ளன. (ஒ.25.113)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வேட்பாளர்களும் கட்டுப்பாடும்

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. வடக்கு மாகாணத்தில் வன்னி தேர்தல் மாவட்டம் மற்றும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் என இரண்டிலுமாகச் சேர்த்து குறித்தொதுக்கப்பட்டுள்ள 12 ஆசனங்களுக்காக 45 அரசியல் கட்சிகளும், 46 சுயேச்சைக் குழுக்களும் களமிறங்கியுள்ளன. வேட்பாளர்கள் என்ற அடிப்படையில் 800 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் இம்முறை களம் காண்கின்றனர்.

ஜனநாயக நாட்டில் வாக்களிக்கும் உரிமையும், தேர்தலில் போட்டியிடும் உரிமையும் அந்த நாட்டின் குடிமக்களுக்கு பிறப்பால் வாய்த்த வரப்பிரசாதம் என்று சொல்லப்படுகின்ற போதிலும், அதற்கும் ஓர் எல்லையும் 'வரையறையும் மிக அவசியமானவை. தேர்தல்களில் களமிறக்குவதற்காக ஆளுமை மிக்க வேட்பாளர்களை முன்பெல்லாம் தேடித் திரிவார்கள், ஆனால் இப்போது வாக்காளர்களின் தளத்தைத் தேடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு வேட்பாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். 'கட்டுப்பணம் செலுத்தினால் நாடாளுமன்ற வேட்பாளர்' என்ற சித்தாந்தத்துக்குள் இன்று எல்லோரும் மிக இலகுவாக ஆட்பட்டுள்ளனர். ஒரே குடும்பத்தில் நாலைந்துபேர் சேர்ந்தால் சுயேச்சைக்குழுவாக களமிறங்கலாம் என்ற நிலையும் இம்முறை நேர்ந்திருக்கின்றது. நாட்டின் ஜனநாயகத்தன்மை மற்றும் அரசமைப்பு உரிமைகள் என்பவற்றுக்கு அப்பால் உண்மையில் இதுவொரு கேலிக்கூத்து. இந்தக் கேலிக்கூத்தை மிக விரைவாகக் களைவதற்கு தேர்தல்கள் திணைக்களம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வேட்பாளர்கள் அதிகரிக்கும்போது வாக்குச் சீட்டுகளின் அளவும் அதிகரிக்கும். இது, நிதிச் செலவை இன்னும் எகிறவைக்கும். நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் போது, தேர்தல்கள் மூலமாக ஏற்படக்கூடிய தேவையற்ற நிதிச் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டியதும் மிகமிக அவசியமானதே. எனவே, வேட்பாளர்களைக் கட்டுப்படுத்துவதற்காக தேர்தலுக்கான கட்டுப்பணத்தை அதிகரிக்க வேண்டும். இதன்மூலம், 'பொழுது போக்கு' அரசியல்வாதிகளை தேர்தல் களத்திலிருந்து ஓரளவு அப்புறப்படுத்திக் கொள்ளலாம். கட்டுப்பணம் அதிகரிக்கும் போது மக்கள் அபிமானத்தை வென்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆளுமைகளுக்கு அரசியல் வாய்ப்புக்கள் அறவே அற்றுப்போகும் சாத்தியங்கள் உள்ளதாகச் சுட்டிக்காட்டலாம். ஆனால், குறிக்கப்பட்ட வாக்குகளைப் பெற்றால், கட்டுப்பணம் மீள வழங்கப்படும் என்ற அடிப்படையில் அதைச் சாதகமாகப் பரிசீலிப்பதில் தவறில்லை.

வேட்பாளர்கள் அதிகரிக்கும்போது மக்கள் பல்வேறுபட்ட கொள்கைகளின் பாற்பட்டுக் கவரப்படுவார்கள். இறுதியில், சாதி சமயம் 'குலம்' கோத்திரம் உள்ளிட்ட பிற்போக்குத்தனமான கோட்பாடுகளின் அடிப்படையில் அவர்கள் வேட்பாளர்களால் பாகுபடுத்தப்படும் சாத்தியங்களும் இருக்கவே செய்கின்றன. இதன் ஆபத்தை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். எல்லாவற்றையும் விட, அத்தனை பேரையும் தேர்தலில் அனுமதிப்பது என்பதை விடவும் ஒரு குழுநிலைப் பரிசீலனைகளை வைத்து அதிலிருந்து குறித்தொதுக்கப்படும் இடங்களுக்கு போட்டியிடும் தரப்புகளை அனுமதிப்பதென்பது மிகச் சிறந்த நடவடிக்கையாகவே இருக்கும்.




# திருடர்களுடன் கூட்டுச்சேர தே.ம.சக்தி தயாரில்லை

## பிரதமர் ஹரிணி திட்டவட்டம்



**கொழும்பு, ஒக்.13**

**நாட்டைச்சீரழித்தவர்களையும், திருடர்களையும் தவிர நாங்கள் யாருடனும் கூட்டுச்சேரத்தயார் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

தேசிய மக்கள் சக்தி சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்த பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாங்கள் போலி வாக்குறுதிகளை வழங்க மாட்டோம். முன்னைய அரசாங்கங்கள் வழங்கிய போலி வாக்குறுதிகளின் பலாபலன்களை இன்று நாங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். எமது தேர்தல் அறிக்கையில் சொன்ன விடயங்களை நாங்கள் செயற்படுத்துவோம், நாங்கள் எவருடனும் இணைந்து பயணிக்கத் தயார், ஆனால் டீல்களை ஏற்றுக்கொள்ள மாட்டோம். நேர்மையான முறையில் அர்ப்பணிப்புடன் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முயற்சிப்போருடன் இணையத்தயாராகவுள்ளோம் - என்றார். (ஒ-25,6)

## வேட்புமனுவை நிராகரிக்கமுடியாது

யாழ்ப்பாணம், ஒக். 13

கடந்தகால அல்லது தற்போதைய நீதிமன்றத் தீர்ப்புகளை வைத்துக்கொண்டு ஒருவரின் வேட்பு மனுவை நிராகரிப்பதற்கு. தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரமில்லை என தேர்தல்கள் ஆணையாளர் எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கா தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஒருவருடைய வேட்பு மனுவை நிராகரிப்பதாக இருந்தால் அவருக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக தடையுத்தரவு பெற வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-6)

## அநுர மீது கழுகுப்பார்வை

கொழும்பு, ஒக். 13

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையை இலங்கையில் உள்ள வெளி நாட்டுத் தூதரகங்கள் மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகிறது. அரசாங்கம் சீனாவுக்கு ஆதரவான கொள்கையைப் பின்பற்றுமா, இந்தியாவுக்கு ஆதரவான கொள்கையைப் பின்பற்றுமா அல்லது அமெரிக்க சார்பு நிலைப்பாட்டில் இயங்குமா என்பதை இவ்வாறு தூதரகங்கள் அவதானித்து வருகின்றன. (ஒ-இ)

## துப்பாக்கிகள் மாயம்

கொழும்பு, ஒக்.13

முக்கியமான பிரமுகர்களின் பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட ஆயிரத்து 690 துப்பாக்கிகளில் 30 துப்பாக்கிகள் மட்டுமே திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த காலங்களில் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத பலருக்கு துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

ரணிலின் ஆட்சிக்காலத்தில் அரசியல்வாதிகளும், வர்த்தகர்களும் தங்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி பொலிஸ் நிலையங்களிலிருந்து கடிதங்களைக் பெற்று துப்பாக்கிகளை பெற்றுள்ளனர்.

இவற்றில் பல காணாமல் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-25,6)

**நாளை**

**14.10.2024**

திங்கட்கிழமை - புரட்டாதி - 28

சுபநேரம் : 12.02 - 01.32


ராகுகாலம் : 07.32 - 09.32

**நாளொரு நல்வார்த்தை**

**நூலகத்தை விட வேறெதுவும் ஒரு மனிதனை மரியாதைக்குரியவராக ஆக்குவதில்லை.**

- வின்சென்ட் சேர்ச்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொருளாதார ரீதியில் நலிவுற்ற இரு மாணவர்களுக்கு புதிய துவிச்சக்கரவண்டிகள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் வழங்கி வைக்கப்பட்டன. (ஒ-22,66)

## ஆமையில் சிவசேனை

யாழ்ப்பாணம், ஒக். 13

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம், வன்னித் தேர்தல் மாவட்டங்களில் இலங்கை சிவசேனையின் 12 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஒன்பது வேட்பாளர்களும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் மூன்று வேட்பாளர்களும் ஆமைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளனர் என இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசமைப்பில் சைவசமயத்துக்கு முன்னுரிமை கொடுக்க, மதமாற்றத் தடைச் சட்டத்தை இயற்றுக, பசுவதை தடைச் சட்டத்தை இயற்றி இலங்கை முழுவதும் மாட்டிறைச்சிக் கடைகளை மூடுக, ஒரே தீவு பல்வேறு இனங்களுக்கு ஒரே நாடு ஒரே சட்டம் இயற்றுக, புதிய வழிபாட்டிடங்கள் கட்டுவது தொடர்பாகப் புத்தசாசன அமைப்பின் 2008 ஆம் ஆண்டு சுற்றறிக்கையை உச்ச நீதிமன்றச் சட்டம் என 2016 இல் உறுதி செய்ததை நாடாளுமன்றச் சட்டமாக்குக ஆகிய ஐந்து முதன்மைக் கொள்கைகளுடன் சைவத்தமிழ்த் தேசிய மீள் எழுச்சியை நோக்கிய பயணத்தில் குறித்த வேட்பாளர்கள் களத்தில் நிற்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-[illegible])






## தேர்தலில் ரங்கா போட்டி



வவுனியா, ஒக். 13

வன்னித்தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜெ.ஸ்ரீரங்கா தலைமையிலான சுயேச்சைக்குழு வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்தது. எதிர்வரும் நவம்பர்மாதம் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ரங்கா மற்றும் [illegible] கதீபன் உட்பட கல்வியியலாளர்களை உள்ள [illegible] சின்னத்தில் போட்டியிடுகின்றது. (ச–110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹெரிடேஜ் அக்ரி பிரைவேட் லிமிடெட், சேதன முறையில் முருங்கை இலையை பயிரிட்டு அதில் உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு, அதி நவீன சேதன முறை பண்ணையையும், அதி நவீன தொழிற்சாலையையும் இயக்கச்சியில் அமைத்துள்ளது.

மேற்கண்ட எமது நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு திறமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

## ரெசிடெண்ட் Farm மேனேஜர்:

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் / பல்கலைக்கழகத்தில் விவசாயத்தில் பட்டம் / சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
- திட்டமிட்டு விவசாயம் செய்வதில் அனுபவம் உள்ளவராய் இருக்கவேண்டும்.
- சொட்டு நீர்ப் பாசனம் முறையில் அனுபவம் உள்ளவராய் இருக்கவேண்டும்.
- இயற்கை விவசாய நடைமுறைகளில் அனுபவம் உள்ளவராய் இருக்கவேண்டும்.
- வயது 30-50 வருடங்களுக்கு இடையில் இருக்க வேண்டும்.
- விவசாயத்தை திட்டமிட்டு செயல்படுத்தி செலவை குறைத்து உற்பத்தியை பெருக்கும் வல்லமை உள்ளவராக இருக்க வேண்டும்.

## குவாலிட்டி அஸூரன்ஸ் நிர்வாகி

- உணவு தொழில்நுட்பத்தில் (Food Technology) முதுநிலை அல்லது இளநிலை படிப்பு இருக்க வேண்டும்.
- BRCG சம்பந்தமான நுணுக்க அறிவும் அது சார்ந்த சிறப்பு நடைமுறைகளும் தெரிந்தவராக இருக்கவேண்டும்.
- சுயமாக வேலை செயல்திறனும் மற்றவர்களுடன் சேர்ந்து அணியாக செயல்படும் மனப்பாங்கு உள்ளவராக இருக்க வேண்டும்.
- தமிழ், ஆங்கிலம் பேசும் திறன் மேலதிக தகைமையாகும்.

## டெக்னீசியன்:

- மின் பொறியியல் துறையில் NCT டிப்ளமோ தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும்(NVQ IV/V)
- 2-3 வருடங்கள் மின் பொறியியலாளராக தொழிற்சாலையில் வேலை செய்த அனுபவம் தேவை.
- மேம்பட்ட அமைப்பு திறமையுடன் அணியாக செயல்படும் மனப்பான்மை தேவை

## உதவி கணக்காய்வாளர்:

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் / பல்கலைக்கழகத்தில் கணக்காய்வாளர் பட்டம் / சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
- 35 வயதுக்கு உட்பட்டவராக இருக்கவேண்டும்
- குறைந்த பட்சம் தனியார் துறையில் 3-5 வருட அனுபவம் தேவை.
- MS Office Package (Excel, word) பாவித்து வேலை செய்யும் திறன்.
- அறிக்கை சமர்ப்பிக்கும் திறன், நிதி நிறுவனங்களுடன் சுயமாக தொடர்பு கொள்ளும் திறன்
- கணினி மயமாக்கப்பட்ட கணக்கியல் சூழலில் வேலை செய்யும் திறன்.

தகுதியுள்ளவர்கள் 10 நாட்களுக்குள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மின்னஞ்சலுக்கு விண்ணப்பிக்கவும்.

QUICK ADS

Hyrin herbals

hrdk@isfindustries.com
CEO Heritage Agri Pvt Ltd
Valaththotam, Iyakkachchi, Sri Lanka
T:P: 0772 078 455



# கூட்டுறவாளர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் 102 ஆவது சர்வதேச கூட்டுறவாளர்தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது கூட்டுறவாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் என். திருலிங்கநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கெ. சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஒ-25, 17)



# இராணுவத்தால் வீடு கையளிப்பு

மன்னார், ஒக்.13

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குருவில்வான் கிராமத்தில் வசிக்கும் பொருண்மியம் நலிவுற்ற குடும்பம் ஒன்றுக்காக இராணுவத்தின் 10 ஆவது கெமுனு கோவா படைப் பிரிவினால் அமைக்கப்பட்ட புதிய வீடு, தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவு கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ஏ.ஆர்.பி. ராஜபக்ச தலைமையில் நேற்றுச் சனிக்கிழமை குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது இராணுவத்தின் வன்னிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜே.பி.சி.பீரிஸ் வைபவ ரீதியாக வீட்டைத் திறந்து வைத்தார். (ஒ-25,56)

EDUCATION Yaalpaanam 6
எடியூகேஷன் யாழ்ப்பாணம்
19th & 20th OCTOBER
10 AM – 04 PM

Jaffna Public Library
யாழ்ப்பாணம் பொது நூலகம்
Some of Our Success Stories




Student Visa | Work Visa | Skill Migration

- புலமைப் பரிசில்கள் ( Scholarships )
- ILTS தள்ளுபடிகள்
- மலிவான கல்வி கட்டணம்
- பல்கலைக்கழக நேர்காணல் இல்லை

கலந்தாய்வு இலவசம்
(No consultant fees)


Call us
077 740 6793 | 0112 827 320

ICFS
151D, High Level Road, Nugegoda
www.icfs.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 28.05.1946 | | 11.10.2024 |



## பாலசிங்கம் நாகநாதபிள்ளை (நாதன், ராசன்)

(TNG Brothers பிரபல வர்த்தகரும் புகையிலை வியாபாரியும் - கொழும்பு)

சரவணை மேற்கு வேலணையை பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நாகநாதபிள்ளை நேற்றுமுன்தினம் (11.10.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் - நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், நடராசா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகாமசுந்தரி (தேவி) யின் பாசமிகு கணவரும், வினோதினி (லண்டன்), வினோதீபன் (சுவிஸ்), வினோராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகீரதன் (லண்டன்), துர்க்காயினி (சுவிஸ்), பிரியங்கா (இணுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தங்கவேல், காலஞ்சென்ற ஞானவேல் (அப்பன்), அஞ்சலாதேவி (பிரான்ஸ்), புஸ்பலீலா (சுவிஸ்), தற்பரநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவரத்தினராசா (இணுவில்), காலஞ்சென்ற சிவலோகநாதன், சண்முகராசா (இணுவில்), காலஞ்சென்ற ஸ்ரீகாந்தராசா, மகேஸ்வரி (இணுவில்), ஸ்ரீரஞ்சன் (சுவிஸ்), செல்வராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற இராசதுரை புனிதவதி, அரியசிவம் உமாபதி, பொன்னம்பலம் சிறோஜினி ஆகியோரின் சம்பந்தியும், சங்கரின் பாசமிகு மாமனாரும், விஷால், அபிஷா, அஸ்வரன், அதீசன், அக்ஷரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (14.10.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடன் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CS/56438) J-1

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 19.06.1947 | | 10.10.2024 |



## சரஸ்வதி செல்வரெட்ணம்

யாழ் திருநெல்வேலி கிழக்கு வெள்ளைப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், பூநகரி அத்தாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சரஸ்வதி செல்வரெட்ணம் அவர்கள் கடந்த 10.10.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பர் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வரெட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், ராஜ்குமார் (கனடா), காலஞ்சென்றவர்களான செல்வகுமார், உதயகுமார் மற்றும் ராதிகா (இ.போ.ச. வடக்கு பிராந்திய காரியாலயம்), ராஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யாழினி (கனடா), ஸ்ரீரஞ்சன் (ஆளுநர் செயலகம் வடக்கு மாகாணம்), கருநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தருன், வர்ஷா, அஸ்வின், அக்ஷா, அகில் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் அன்னலட்சுமி, தனபாலசிங்கம், தனபாக்கியவதி, லீலாவதி, ரவீந்திரன், மாலதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கமலபூரணி, செல்வரெத்தினம், பாலசுந்தரம், பரமேஸ்வரன், வேலாயுதபிள்ளை, பூபாலசிங்கம் மற்றும் வாசுகி, கனகரத்தினம், தயாழினி, ஆறுமுகம், புவனேஸ்வரி, அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (14.10.2024) திங்கட்கிழமை இல 22 வெள்ளைப்பிள்ளையார் கோவிலடி திருநெல்வேலி கிழக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(CR/43400) J-1

British BUSINESS COLLEGE
Where Students Come First

# BRITISH BUSINESS COLLEGE
NO: 653 Navalar Road, Jaffna
077 408 3656 / 077 700 9653

25th+ Years of Excellence.
BBC
For a Brilliant Future

யாழ் குடாநாட்டில் குழந்தைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு 25 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றும் BBC யில் உங்கள் குழந்தையை இணையுங்கள்

2025 ஆம் ஆண்டிற்கான புதிய அனுமதிகள்

New Syllabus

## பாலர் பாடசாலை பிரிவுகள்

| Play Group | Montossori | Pre-School |
|---|---|---|
| 2+ - 3 | 3+ - 4 | 4+ - 5+ |

## பாடவிதானமும் கற்பித்தல் முறையும்

* Dr Maria Montossori Method.
* Canadian ECE Method
* German 2KG, KG, UK System

ஆகிய சர்வதேச முறைகளைச் சார்ந்து எமது கல்வித்திட்டத்திற்கு அமைய விளையாட்டுக்களுடன் கூடிய ஆங்கில மொழிமூல கற்கைநெறிகள்

* தமிழ் கட்டாய பாடம்

## அனைத்து குழந்தைகளும் பங்கேற்கும் சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்

* English Day of Concert.
* Sports Festival.
* Student's Day Competion.
* முத்தமிழ் விழா
* Carols
* Pre, School Graduation (கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.)

## திறனை மேம்படுத்தும் விசேட செயற்பாடுகள்

* Pre Cussion Band
* Meditation, Speech, Dance, Drama in English & Tamil
* விசேட மாதாந்த செயற்பாடுகள்

## BBC Early Learning English Medium School in Jaffna Peninsula.

**யாழ்ப்பாணம்**
- இலக்கம் 653 நாவலர் வீதி, நல்லூர்.
- இலக்கம் 62, KKS வீதி, யாழ்ப்பாணம்

**மானிப்பாய்**
- இல: 252 ஆலடிச்சந்தி, யாழ்வீதி மானிப்பாய்.
- சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். (மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதி.)

**சுன்னாகம்**
- Dr. சபாரத்தினம் வீதி, (Skantha பாடசாலை அருகாமை)
- இலக்கம் 142, KKS வீதி, மல்லாகம்.

**சாவகச்சேரி**
- சாவகச்சேரி Hindu Primary வீதி,

**நெல்லியடி**
- பருத்தித்துறை வீதி, மாலுசந்தி


Face Book: british business college   Email: britishbusinesscollege @ gmail.com

(cr.43370) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

நல்ல போராட்டத்தை போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைகாத்துக்கொண்டேன்
தீமோத்தேயு 4. 7



| நிஜமானது | நிழலானது |
|---|---|
| 07 . 11 . 1993 | 13 . 10 . 2012 |

## அமரர் விஜயச்சந்திரன் டினேஸ்

(சென் ஜோன்ஸ் கல்லூரி, 2013 வர்த்தகப் பிரிவு மாணவன்)

என் செல்ல மகன் டினே !

எம்மை விட்டு பிரிந்து 12 ஆண்டுகள் வெகு விரைவில் சென்றுவிட்டதையா?

12 ஆண்டுகள் அல்ல 120 ஆண்டுகள் சென்றாலும் உமை மறக்க யாரும் இல்லை இவ்வுலகில்.

சிறுவயதினிலே சிரத்தையுடன் நீகற்று சிறந்த அறிவாற்றல் கொண்டவனாய் வாழ்ந்தாயடா (ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய் என்ற பொய்யாமொழிப்புலவரின் வாக்கிற்கிணங்க உன் தாய் தந்தையை மகிழ்வில் ஆழ்த்தினாய் மகனே.

உனை சுமந்தவலியை விட உன் பிரிவால் சுமக்கும் வலியை அறிவாயோடா?

வாழ்ந்தபின் இறப்பவர்கள் பலர் இருக்கும் இவ்வுலகில் இறப்பிலும் வாழ்பான் நீ என்று உலகம் உன்னை போற்றுதையா

ஒரே ஒரு மகனாய் ஜனனம் ஆகி ஈரொன்பது வருடங்கள் இளைஞன் ஆகி எத்தனை வடிவத்தில் உனை பார்க்க நினைத்தும் எதுவுமற்ற வெற்றுக்கூடாய் ஏமாற்றத்துடன் நிற்கின்றோமையா?

கல்வியில் கரைகாண்பாய் சடுதியில் எம்மைவிட்டு எங்கே சென்றாய்?

ஆறமுடியவில்லை அழுது புலம்புகின்றோம் ஆறாக் கண்களுக்குள் நீயேதான் நிற்கிறாய்!

நீ நடந்த பாதையெல்லாம் நெருஞ்சிமுள்ளாய் குத்துதையா தொப்புள் அறுகையிலே தொடர்பும் அறுந்திருந்தால் அப்பொழுதே டினோஷை அகத்திலே இழந்திருப் போம்.

பத்தொன்பதாவது அகவையில் பரலோகம் சென்று இன்று பன்னிரெண்டு ஆண்டுகள் கடந்தாலும் பகலிரவாய் உம் நினைவே இறை தூதாய் இருந்தெமக்கு என்றும் கழிகாட்டும்.

இம் மண்ணில் உம்மை பிரிந்தாலும் விண்ணில் உம்மைக் காண்போம்
என்ற நம்பிக்கையில் மிகுதி நாட்களைக் கழிப்போம்
நீங்காத நினைவாய் என்றும் எம் உள்ளத்தில் உள்ளாய் மகனே!

38/46, சிவன் புது வீதி,
மணல்தறை லேன், கந்தர்மடம்

என்றும் உன் நினைவுகளுடன்
பெற்றோர்



# Stores / Shop
வாடகைக்கு

இல. 127, Power House Road,
Jaffna Jubilee Bazzar Building

இரண்டாம் மாடியில்
Stores / Shop
உடனடியாக வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
0777847155 (Kutub)



# வேலைவாய்ப்பு

நாவலர் வீதியில் இயங்கி வரும் சுப்பர் மார்க்கெட் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

- Sales Assistant (உதவியாளர்)
- Full Time and Part time

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு:- 077 419 5209

(CS/56443) J-1



# Apartment வீடு விற்பனைக்கு

PEREIRA LANE, வெள்ளவத்தையில் GALLE ROAD, DELMON HOSPITAL & MARKET க்கு மிக அருகாமையில் அமைந்துள்ள 2 BEDROOM WITH 1 BATHROOM உள்ள தொடர்மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

# 10 ACRE காணி விற்பனைக்கு

POINT - PEDRO மருதங்கேணி வத்திராயன் கிழக்கு கிராமசேவகர் அலுவலகத்திற்கு அருகாமையில் புதிய காப்பற் வீதியில் (அரசடி வீதி) அமைந்துள்ள 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0772680029
+14165560642 (WhatsApp)


# கசிப்புடன் ஒருவர் சுழிபுரத்தில் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணம், சுழிபுரம் பகுதியில் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின்பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-27)

# தேசிய வாசிப்பு மாத விசேட செயற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.13

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு விசேட செயற் பாடுகள், அமெரிக்கன் கோணர் அமைப்பால் யாழ்.பொதுசன நூலகத்தின் சிறுவர் பகுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. அனைவரையும் பங்குகொள்ளுமாறு மாநகர சபை பிரதம நூலகர் அறிவித்துள்ளார். (ஒ-25)


# இஸ்ரேலுக்கு உதவினால் விளைவு மோசமாகும்

ஈரானுக்கு எதிராகத் தாக்குதல் நடத்த, எந்தவொரு சூழலிலும், இஸ்ரேலுக்கு உதவி செய்ய வேண்டாம் என அரபு நாடுகளுக்கு ஈரான் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானில் ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

இதற்குத் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்திருந்தார். ஈரானின் மூத்த தலைவர் சயீத் அலி ஹொசைனி கமேனி இது தொடர்பில் தெரிவித்ததாவது: மத்திய கிழக்கில் நிலவி வரும் பதற்றமான சூழ்நிலைக்கு, மத்திய அரபு நாடுகள், இஸ்ரேலுக்கு உதவவேண்டாம். அரபு நாடுகள் தங்களின் வான்வழி மற்றும் இராணுவத் தளங்களை இஸ்ரேலிய தாக்குதலுக்கு பயன்படுத்த அனுமதித்தால் அதனை ஏற்றுக் கொள்ளமுடியாது. அதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும். இஸ்ரேலுக்கு உதவினால் நிலைமை மோசமாகும் என்று அவர் கூறினார். (ஒ-இ)


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 . 08 . 1959 | 11 . 10 . 2024 |

## இரத்தினம் ஜெயகுமாரன்

(உரிமையாளர் - ஜெயந்தா அரைக்கும் ஆலை - இணுவில்)

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் இணுவில் - மானிப்பாய் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் ஜெயக்குமாரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (11.10.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சொர்ணலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கேதீஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஶ்ரீதரன் இரஞ்சிதமலர், ராகினி மற்றும் உதயகுமார், செல்வகுமார், ரஜனி சதீஸ்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், லோகேஸ்வரன், ரதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10. 2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/56442) J-1



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.07.1940 | 06.10.2022 |

## அமரர் சண்முகம் கனகம்மா (வெள்ளையம்மா)

திதி : 13.10.2024

ஆண்டுகள் இரண்டு ஆனபோதும்
ஆறவில்லை எங்கள் மனம் ஆறுதில்லை
வெள்ளை மனம் கொண்ட எங்கள் வெள்ளையம்மா
கள்ளமில்லை உன்மனதில் கருணையே உன் வடிவமம்மா
தாய்க் கோழியாய் எமைக்காத்து-தேசத்தாயாய் நின்ற உள்ளமம்மா
தன்பிள்ளைபோல் எமைத்தாங்கி நின்ற
சுமைதாங்கி நீங்களம்மா இடர்சுமந்த வேளையிலும்
தடையின்றி உணவளித்த அட்சயபாத்திரம் நீங்களம்மா
கார்மேகம் போல் கயவர் எமைச் சூழ்ந்திருக்க
கண்ணை இமை காப்பதுபோல்
காத்துநின்ற காவியம் நீங்களம்மா

மருதங்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

என்றென்றும் உங்கள் நினைவு சுமந்து வாழும்
குடும்பத்தினர் மற்றும்
நீங்கள் வளர்த்த பிள்ளைகள்

(CS/56434) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவுடன், சமந்தா நேற்றுமுன்தினம் பேச்சு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் நிர்வாகி சமந்தா பவருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இணைய தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்றது. பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதி மற்றும் சமந்தா பவர் ஆகியோருக்கு இடையில் கருத்துப் பரிமாறப்பட்டதுடன், எதிர்காலத்தில் இலங்கைக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. (ஒ-இ)


## உள்ளூர் உற்பத்திகளை உலக சந்தையில் விற்பனை செய்து கொள்ள

## இதோ அரிய வாய்ப்பு!!!

உள்ளூர் தயாரிப்புக்களை மாத்திரம் விற்பனை செய்து கொள்ள பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட இணையத்தளத்தில் உங்கள் தயாரிப்புக்களையும் பதிவு செய்து கொள்ள

shalanka.lk/shops/create

எந்த வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

MADE IN SRI LANKA SHALANKA.LK 0777 391 592 0720 620 520

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 65 ரூபா. நிலம் இழுத்துப் பதிக்க - 90 ரூபா

077 334 1281

## மணமகள் தேவை

1984. இந்து. மிருகசீரிடம். ENGINEER

பூர்வீகம் - கரவெட்டி. வதிவிடம் -NETHERLANDS

மணமகன் பதிவு இல: 10967

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை

www.EQMarriageService.com

அழையுங்கள்: 076 664 9401

(CS/29038A) J-1

## மணமகள் தேவை

1983. இந்து. சதயம். DRAFTSMAN

பூர்வீகம் - புங்குடுதீவு. வதிவிடம் - யாழ்ப்பாணம்

மணமகன் பதிவு இல: 11075

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை

www.EQMarriageService.com

அழையுங்கள்: 076 664 9401

(CS/29038C) J-1

## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்



இந்தியாவில் ஆன்மிகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை

மாலை : 3.00 - 05.00 மணிவரை

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- கால் வீக்கம், நாட்பட்ட ஆறாத புண்.

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

திருமதி வே. மோகனதாஸ்

இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

வெளிநாட்டவர்களும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: 071 241 1234, 021 221 1239

(CS/1342) B) J-1

## வேலையாட்கள் தேவை

சில்லறை வியாபார நிலையம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. ஆண்கள் மட்டும் விரும்பத்தக்கது.

077 777 0394

(CS/56445) J-1

## மணமகன் தேவை

1994. இந்து. புனர்பூசம். CIVIL ENGINEER

பூர்வீகம் - உடுவில். வதிவிடம் - யாழ்ப்பாணம்

மணமகள் பதிவு இல: 11091

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை

www.EQMarriageService.com

அழையுங்கள்: 076 664 9401

(CS/29038B) J-1

## Machine Operator மற்றும் உதவியாளர் (Helper) தேவை

கொழும்பை அண்மித்த பகுதியில் இயங்கி வரும் பிரபல தொழிற்சாலை ஒன்றிற்கு ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் 45,000/- + வழங்கப்படும். உணவு. தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதி இலவசம். மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

077 388 1628, 077 785 5244

(CS/56429) J-1

## வீடு வாடகைக்கு உண்டு

ராஜா கிறீம் ஹவுஸ் அருகில் கலட்டி சீனியர் வீதி பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.

077 434 8068

(CS/56422) J-1

## UTE CAT

www.ute.lk

### உலகத்தரம் வாய்ந்தஅணியில் ஓர் அங்கத்தவராகுங்கள்

76 வருட கால அனுபவமும் திறமையும் கொண்டு, நாடு முழுவதும் 340 இற்கும் மேற்பட்ட ஊழியர்களையும், உலகபுகழ் பெற்ற தரமான தயாரிப்புகளையும் கொண்ட UTE நிறுவனமானது கட்டுமானத்துறையில் புகழ்பெற்று விளங்குகின்றது.

நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான சேவையை அர்ப்பணிப்புடன் வழங்குவதுடன் விற்பனைக்கு பின்னரான சேவையையும் வழங்குகின்றோம்.

கட்டுமான இயந்திரங்கள், புதுப்பிக்கத்தக்க சக்தி, தளபாடங்கள் மற்றும் பண்டகசாலைகளுக்கான தீர்வுகள், வெல்டிங் உபகரணங்கள், தொழில்துறை மற்றும் பொறியியல் துறை தொடர்பான தீர்வுகளை வழங்கும் உலகின் முன்னணி தயாரிப்புகளை நாம் பிரதிநிதித்துவம் செய்கிறோம். அவற்றில் மிக முக்கியமாக Caterpiller இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் நாங்களே ஏக முகவராக செயற்படுகின்றோம்.

நாங்கள் எமதுசெயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு கருதுவதனால் எங்களுடன் இணைத்துக்கொள்வதற்கு திறமையான்வர்களை தேடுகின்றோம்.

### விற்பனை நிர்வாகி (வடக்கு பிரதேசம்)

தேவையான தகுதிகள்:

- விற்பனைத்துறையில் 2 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம்.
- வாடிக்கையாளர்களுடன் நீண்ட கால உறவுகளை பேணி வருவதற்கான தனிப்பட்ட திறமை.
- புதிய வியாபார முயற்சிகளை உருவாக்கும் திறன், இலக்குகள் மற்றும் கால வரையறைகளுக்குள் நிறைவு செய்யும் திறமை.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சிறந்ததொடர்பாடல் திறனுடன் வலுவானபேரம்பேசும் திறமை.
- நீண்ட நேரம் பணியாற்றுவதற்கும் அதிக தூரம் பிரயாணிப்பதற்குமான ஆற்றல்.
- செல்லுபடியாகும் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல்.

வடமாகாணத்தில் வசிக்கும் விண்ணப்பதாரிகளுக்குமுன்னுரிமைவழங்கப்படும்.

எமது உலகத்தரம் வாய்ந்தஅணியில் அங்கத்தவராகுவதற்கு உங்களாலும் முடியும் என நீங்கள் கருதினால் உங்கள் விண்ணப்பங்களை இரண்டு உறவினரல்லாத மத்தியஸ்தர்களின் தொடர்பு விபரங்களுடன் vacancy@utequip.com என்றமின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

சுருக்கப்பட்டியலிடப்பட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரமே அறிவுறுத்தப்படுவர்.

Head of Human Resources
UTE
683, Negombo Rd,
Mabole, Wattala
Fax: 2931550

AJAX bohler RAYMOND CAT Lift Trucks CROWN DEXION ENERPAC Fuji Electric

## Home Visit Classes English/ Tamil Medium

ACCOUNTING / GEOGRAPHY HISTORY / CIVICS / ENGLISH

GR 6 - 13

077 331 6402

## The Royal College of Jaffna

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில. By ந.விக்னேஸ்வரன்

ஆச்சாரியார் -பிரான்பற்று வீதி, சங்கானை.

Tel: 077 675 1649

## ஆண் தொழிலாளர்கள் தேவை

லங்கா ஐஸ் (பிரைவேட்) லிமிட்டற் இன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு ஆண் தொழிலாளர்கள் தேவை.

வயது: 18 - 55

கூடுதல் சம்பளம். உணவுக் கொடுப்பனவுடன் தங்குமிட வசதிகள் இலவசம்.

077659 0357,070 770 0310

## மணமகன் தேவை

1994. இந்து. ஹஸ்தம். MANAGER

பூர்வீகம் - கரவெட்டி. வதிவிடம் - Swiss

மணமகள் பதிவு இல: 11058

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை

www.EQMarriageService.com

அழையுங்கள்: 076 664 9401

(CS/29038D) J-1

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கை, பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம் பலாலி வீதி, ஊரெழு மேற்கு, பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில் 077 612 9343

நியூ லங்கா பாம் கிளை: K.K.S. வீதி, இணுவில்

## இணைப்பு இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்பு நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அனுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்புடன்

Ts&Cs apply

Www.inaipa.com

(CS/56378) J-1

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

### யாழ் ஃப்ரஞ்சு நட்புறவுக் கழகம்

The Only Official French Language Centre in Jaffna

ஃப்ரஞ்சு மொழியை ஃப்ரஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

Alliance Française de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேஒரு ஃப்ரஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. சர்வதேச தரம் வாய்ந்த Alliance Française de Jaffna இல் France மற்றும் ஃப்ரஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

➤ ஆரம்பம்: 19.10.2024 ➤ காலை : 9.00 a.m

17, Kandy Road, Jaffna Phone: 021.2228093


E-mail: alliancejaffna@yahoo.com

(பஸ்ரியன் (பஸ்ரியன் ஹொட்டல் அருகே) சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்)

(cs.56439) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி ஆனந்தர்

இணுவில் கிழக்கு, அங்களப்பாயைப் பிறப்பிடமாகவும், வரகுசாட்டி வீதி, நவாலி வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆனந்தர் நேற்று (12.10.2024) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், தபோநந்தினி, யோகானந்தன் (தபாலகம் மானிப்பாய்), கேசவானந்தமூர்த்தி (முகாமையாளர் ஆசிரியர் மத்திய நிலையம் அக்கராயன்), தயானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கோபாலசிங்கம், மாலதி, உஷாந்தினி, சிவாஜினி (ஆசிரியர், பண்ணாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபாலினி, சுதர்சன், சுபர்சன், சுதர்சினி, சுதாயினி, வர்மிதா, சங்கமன், கலைப்பிரியன், பவிதரன், கவின்யா, சுபிதன், தருண் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, மனோன்மணி மற்றும் சிவராசா, நடராசா, நாகேஸ்வரன், சிதம்பரேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கணேஸ்வரி, செல்லத்துரை, கண்மணி, சண்முகரத்தினம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், அன்சிகா, சினோயன் ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2024) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


வரகுசாட்டி வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**0777 31 61 38**

(CS 1606) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 10 . 1942



மறைவு 11 . 10 . 2024

### கந்தையா குமாரசிங்கம்

**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ACI Ltd)**

சங்கரத்தை குளத்தடியை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குமாரசிங்கம் அவர்கள் கடந்த 11.10.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் பொன்னம்மா, அமரர் மகேஸ்வரன் (இலங்கை போக்குவரத்து சபை முன்னாள் உத்தியோகத்தர்), திருமதி வீரபத்திரன் சந்தானலட்சுமி (சுவிஸ்), தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற CDOA, நீர்ப்பாசனத் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஆதவன் (IT விரிவுரையாளர்), தாரணி (கனடா), ஆரணி (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சகுணன் (கனடா), லதன் (பொது சுகாதார பரிசோதகர், தெல்லிப்பளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஓவியா, விவேகன், அற்புதா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை மறுதினம் (15.10.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**மகன் - ஆதவன் - 077 2562 981 (மானிப்பாய்)**
**மகள் - தாரணி - +141 684 17117 (கனடா)**
**மருமகன் - லதன் - 077 340 5973 (மானிப்பாய்)**
**மகள் - ஆரணி - 077 322 6570**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய்.

(CS 1605) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 01 . 1951



இறப்பு 12 . 10 . 2024

### அருணாசலம் குமாரசாமி

**(ஓய்வுபெற்ற தொழில் திணைக்கள ஊழியர்)**

அளவெட்டி கொத்தாவத்தையை பிறப்பிடமாகவும் அரசடி வீதி, கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் குமாரசாமி நேற்று (12.10.2024) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நல்லையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தெய்வநாயகியின் அன்புக் கணவரும், நிவேஜா, லோகசுதன், நிருபனா ஆகியோரின் அன்புத் தந்தையும், கேசவனின் அன்பு மாமனாரும், நிகரனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சந்திரசேகரம், திருநாவுக்கரசு, பத்மாவதி, கமலாதேவி அமுதாம்பிகை மற்றும் வனஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோபீசகனின் அன்பு சிறிய தந்தையும், காலஞ்சென்ற மயில்வாகனம், நாமகள் ஆகியோரின் மைத்துனரும், ஞானசுந்தரம், கணேஸ்வரி, யோகச்செல்வன், சிவகுமாரன், ஞானபூங்கோதை, யோகதாசன், கங்கேஸ்வரி காலஞ்சென்ற கந்தவனம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஞானேஸ்வரி, கணேஸமூர்த்தி, தவமணிதேவி, சிவகுமாரி, ராதிகா, சோதிநாதன், இளவழகன் காலஞ்சென்ற நாகறஞ்சினி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2024) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் (கொக்குவில்) நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைக்கோட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**0777 2356 15 (மகன்)**
**0777 4250 53 (மருமகன்)**

(CS 1610) A-1

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி கந்தசாமி (காந்தி)

யாழ்ப்பாணம் நல்லூர் மூத்தவிநாயகர் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி (காந்தி) கடந்த (11.10.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், சிவசோதியின் அன்புக் கணவரும், லவீன்டிரன் (MLT), பார்த்தீபன் (கனடா), துஷாயினி (இலங்கை வங்கி), துளசி (நியுசிலாந்து), டினேஸ்கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர் குமாரசாமி, கனகமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், சிவபாலன் (சிறாப்பர்), சிவகுமார் மற்றும் உமாபதி, சிவதாசன், சிவபாலன், சிவரூபி, சிவறூபன், தாட்சாயினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், துர்க்காயினி, கௌசி, சிவகுமார், பிரகாஷ், கேசிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஞ்சினி, அமரர் ரவீந்திரன், அமரர் சிறிதரன் பவானி ஆகியோரின் சிறிய தந்தையும், ஜஷ்விகா, விகாஷ், செயோன், மயிலன், மித்திரன், ஆத்துஜி, விஷ்ணு, மயூ, அக்ஷரா, பிரியங்கா, பிரணவ், அபினவ், வைஷ்ணவ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.10.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30/29, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0777 730 949**

(CS 1611) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரம்படிப் படுகொலை நினைவு கொக்குவிலில்

யாழ்ப்பாணம், ஒக். 13

இந்திய அமைதிப்படை மேற்கொண்ட ஈழத் தமிழ்மக்கள் மீதான படுகொலைகளின் வரிசையில் முதல் சம்பவமாகப் பதிவாகிய கொக்குவில் கிழக்கு பிரம்படி கொடூரப் படுகொலையின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை கொக்குவிலில் அமைந்துள்ள நினைவுத் தூபியடியில் கொக்குவில் பிரம்படிப் படுகொலை நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில் கொக்குவில் பிரம்படிப் படுகொலைச் சம்பவத்தில் தனது தாய் மற்றும் இரு சகோதரிகளை இழந்த விஸ்வ லிங்கம் சுசீந்திரன் பொதுச் சுடர் ஏற்றினார். தொடர்ந்து நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஒருநிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

(ச-66)

# தே. எண்ணெயில் கலப்படம்

## தடுக்குமாறு கோரிக்கை

தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் இரசாயனம் கலக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் உள்ளூர்ச் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. இயற்கை தேங்காய் எண்ணெயிலிருந்து இரசாயன சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயை வேறுபடுத்துவதற்கான வெளிப்படையான பொறிமுறையை உருவாக்க வேண்டுமென இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை தர நிர்ணய சபையின் வகைப்பாட்டின் படி, இரசாயன ரீதியாக சுத்திகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெயிலிருந்து இயற்கையாக உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெயை வேறுபடுத்துவதற்கு பரிசோதனைகள் உள்ளன. ஆனால் இறக்குமதியாளர்கள் SLSI வழிகாட்டுதல்களைத் தவிர்க்கிறார்கள்.

நுகர்வோர் எந்த வகையான தேங்காய் எண்ணெயை உட்கொள்கிறார்கள் என்பதை அறிய அவர்களுக்கு உரிமை உள்ளது. நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் சட்டங்கள் உள்ளன. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகள் இன்னும் ஆர்வம் காட்டவில்லை இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் தொடர்பில் கவலை கொள்ள வேண்டிய அவசியமில்லை என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையை ஏற்றுக் கொள்ளமுடியாது.

இறக்குமதி செய்யப்பட்ட இந்த எண்ணெய்களில் உள்ள கனரக உலோக எச்சங்களைக் கண்டறிவதற்கான குறிப்பிட்ட சோதனைகள் எதுவும் நடத்தப்படாத நிலையில், அத்தகைய உத்தரவாதத்தை அவர்களால் எப்படி வழங்க முடியும்?

நுகர்வோர் விவகார அதிகார சபை, தென்னை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் சுகாதார அமைச்சுக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சட்ட அதிகாரமுள்ளது என்றும் பாரம்பரிய தேங்காயெண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

(ச-6)


**விசா ஆலோசனை சேவை**
(MK VISA (PVT) Ltd)

- U.K Visit 03 வாரங்களில் நியுஸ்லாந்து Visit 03 வாரங்கள் பிரான்ஸ், ஜேர்மனி நிராகரிக்கப்பட்ட விசாக்களுக்கும்
- Student visa
- Work Permit U.K Canada, கங்கேரி, மோல்டோவா

வெள்ளவத்தை கொழும்பு பலாலி வீதி யாழ்ப்பாணம்

தலைமை அலுவலகம்: வைரவர் கோவில் வீதி-வவுனியா

தொடர்பு: 077 604 0373

**விற்பனைக்கு**
பப்பா காய்கள் (பப்பாளி காய்கள்)
மொத்தமாக விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 077 993 8348

**வேலை ஆட்கள் தேவை**
சிறு கைத்தொழிலுக்கு (பெண்கள் விரும்பத்தக்கது) அத்துடன் அறைகள் வாடகைக்கு உண்டு.
077 724 2427, 077 741 2713

**காணி விற்பனைக்கு**
கோண்டாவில் வீதி ஆசிரயர் பயிற்சி கலாசாலை லேன் கோப்பாய் தெற்கு கோப்பாய் இல் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 922 5501
075 922 5014

**பாராளுமன்ற தேர்தல்-2024**
இலங்கை தமிழரசுக் கட்சியின்
யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட
வேட்பாளர் அறிமுக விழா

இடம் - யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கம்
காலம் - ஞாயிற்றுக்கிழமை (13.10.2024)
நேரம் - பிற்பகல் 3.00 மணி
கட்சி ஆதரவாளர்கள்
பொதுமக்கள்
அனைவரும் கலந்து சிறப்பிக்கவும்
-இலங்கை தமிழரசுக் கட்சி - யாழ் மாவட்டம்-

**வீடு வாடகைக்கு உள்ளது**
அளவெட்டி மத்தியில் நவீன வீடு வாடகைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு:
076 441 4749

**வீடு விற்பனைக்கு உண்டு**
ஆடிய வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் CTB பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள 3 1/4 பரப்பு மற்றும் 05 படுக்கை அறைகளை கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 920 5368

**கடை வாடகைக்கு**
ஆஸ்பத்திரி வீதியில், சத்திரசந்திக்கு அருகாமையில் கடையொன்று வாடகைக்கு உண்டு. பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு மட்டும்.
தொடர்புகளுக்கு:-
076 570 4141
(CR/43405) J-1

**ஆசிரியர் தேவை**
யாழ். நகரில் வீட்டுக்கு வந்து AL படிக்கும் மாணவிக்கு அளவையியல், இந்து நாகரிகம், ICT ஆகிய பாடங்களை கற்பிக்கக் கூடிய பெண் ஆசிரியர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 628 0685

**வீடு காணி விற்பனைக்கு**
ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பொன்னையா லேனில் சுமார் 4 1/2 பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
077 958 8463, 076 383 9767

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம், அரியாலை நெடுங்குளம் சந்திக்கு அருகாமையில், A9 பாதையில் 09 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 607 8888
Whatsapp No: +61 416 959 2115

**வேலை ஆட்கள் தேவை**
யாழ் நகரில் பூமாலை கட்டத்தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் தேவை
தொடர்புகளுக்கு:
077 521 7750

**வயல் காணி விற்பனைக்கு**
கிளிநொச்சி உருத்திரபுரம் பிரதான வீதியில் வீதியோரமாக 10 ஏக்கர் (8 ஏக்கர் வயல், 2 ஏக்கர் மேடு) உறுதிக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
077 645 0375


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொகுசு ஜீப்பை கைப்பற்றிய சுங்கத் திணைக்களம்

கொழும்பு, ஒக். 13
சுங்கத் திணைக்களத்தில் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு ஜீப் ரக வாகனமொன்றை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு கைப்பற்றியதையடுத்து, அந்த வாகனத்தை அரசுடைமையாக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுங்கத் திணைக்களத்துக்குப் போலியான ஆவணங்களை வழங்கி, இந்த ஜீப்பை இறக்குமதி செய்ததில், அரசாங்கத்துக்கு ஐந்தரை கோடிக்கும் அதிகமான வரி மோசடி இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. இது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய, கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் திலின கமகேவால் இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஒ-இ)

## முக்கியமான...

கொழும்பில் நேற்று மாலை நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின்போதே பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான நிஹால் தல்துவ மேற்கண்ட தகவலை வெளியிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சி.ஐ.டி.யினர் மற்றும் ஏனைய விசாரணை பிரிவுகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் சில விசாரணைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி, அவற்றைத் துரிதப்படுத்துமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சிமிருந்து பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பவங்கள் தொடர்பான மீளாய்வின் பின்னரே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பிணைமுறி விவகாரம் தொடர்பான விசாரணை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை, வர்த்தகர் தினேஷ் சாப்டரின் மரணம் தொடர்பிலான விசார்ணைகளைத் துரிதப்படுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது. விசாரணைகளுக்காக மேலதிக அதிகாரிகள் தேவைப்படின் இணைத்துக்கொள்ளுமாறும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், 2007ஆம் ஆண்டில் கிழக்கு பல்கலைக்கழகத்தில் உபவேந்தராக செயற்பட்ட சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் காணாமல்போன சம்பவம் தொடர்பான விசாரணை திருப்தியான வகையில் நடைபெறவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பிலும் விரிவான விசாரணை கோரப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் சிவராம் உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணாமல்போன லலித்குமார், குகன் முருகநாதன் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் திருப்தி இல்லையென்பதால் அது தொடர்பான விசாரணைகளையும் துரிதப்படுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

## ஐக்கிய...

பரபரப்பான விடயமாக மாறியுள்ளது. கட்சித் தலைமையால் பதவி பறிக்கப்பட்டதையடுத்தே இந்த முடிவுக்கு வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அஜித் மான்னப்பெரும மேலும் தெரிவித்ததாவது:-

'நான் இந்தத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட வேட்புமனுவில் கையொப்பமிட்டேன். கம்பஹா மாவட்டத்தில் 20 வருடமாக அமைப்பாளராகப் பதவி வகித்துள்ளேன். ஆனால், எனக்குத் தெரியாமல் என்னிடம் இருந்து பதவி பறிக்கப்பட்டுள்ளது. சஜித் பிரேமதாஸ தொடர்பில் நான் கடும் விரக்தியடைந்துள்ளேன். வேட்புமனுவில் கையொப்பமிட்டு 24 மணிநேரத்துக்குள் வேறு ஒருவரை கம்பஹா மாவட்ட அமைப்பாளராக நியமிக்க சஜித் நடவடிக்கை எடுத்துள்ளார். ஐக்கிய தேசிய கட்சிக்காகவும் ரணிலுக்காகவும் வேலை செய்த ஒருவரை அவ்வாறு நியமித்துள்ளார். இதனால் நான் மிகவும் விரக்தியடைந்துள்ளேன்' -என்றார். (அ-ம-இ)

## பொதுத்...

சரத் பொன்சேகா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இம்முறை நான் பொதுத்தேர்தலில் போட்டியிடவில்லை. தேசிய மக்கள் சக்தியுடன் பேச்சு நடத்தப்பட்டாலும் அது வெற்றியளிக்கவில்லை. நாடாளுமன்ற அரசியலில் இல்லாவிட்டாலும் இன்னும் ஐந்து வருடங்கள்வரை அரசியலில் ஈடுபடத் தீர்மானித்துள்ளேன்.

தேசிய மக்கள் சக்தியின் நடவடிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயங்களுக்கு ஆதரவு வழங்கப்படும். தவறான வழியில் அரசு பயணித்தால் அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படும்" - என்றார். (அ-ம-44)

## கனேடியத்...

தீவக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும், புங்குடுதீவு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கனேடியத் தூதுவர் நீண்டநேரம் மக்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன், தூதரக ரீதியாக தீர்க்கப்படக் கூடிய அத்தனை பிரச்சினைகளுக்கும் தன்னால் வழங்கக்கூடிய முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் கனேடியத் தூதுவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

பெண்கள் அமைப்பினர், மீனவ சமூகத்தினர், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பல தரப்பினரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ-ம-60)

## பொலிஸ்...

யத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## டெங்கு...

மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ளனர் என்றும், இதன்படி மேல் மாகாணத்தில் 17 ஆயிரத்து 159 தொற்றாளர்கள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 20 டெங்கு மரணங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ம)

## அபாயமாக...

கடந்த ஒரு வாரத்தில் சுமார் 10 விபத்துகள் வல்லைப் பாலத்தில் ஏற்பட்டுள்ளன. பாலத்தின் அதீதமான வழுக்கும் தன்மை காரணமாகவே அதிகமான விபத்துகள் நிகழ்கின்றன. நேற்றும் ஒருவர் அநியாயமாக உயிரிழந்துள்ளார். சாதாரணமாகவே வழுக்கும் தன்மையுடன் காணப்படும் வல்லைப் பாலம், மழைக்காலத்தில் இன்னுமின்னும் வழுக்கும் தன்மைக்குத் தள்ளப்படுவதால், மழைக்காலத்தில் பாலத்தின் ஊடான போக்குவரத்து மிகுந்த அச்சத்துக்குரிய விடயமாக மாறி வருகின்றது என்றும், ஆதலால், இந்தப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு வழங்க வேண்டும் என்றும் பொதுமக்கள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-26)

## வல்லைப்...

(வயது - 38) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மோட்டார்சைக்கிளும், யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற பட்டா வாகனமும் மோதியதிலேயே இந்த இறப்புச் சம்பவித்துள்ளது.

தன்னுடைய பிள்ளைக்கு ஏடு தொடக்கல் நிகழ்வைச் செய்துவிட்டு வந்த போதே அவர், இவ்வாறு விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரிவே. பாஸ்கரன் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-20-26-100)

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் 2 1/2 பரப்பு, தொழில் மேற் கொள்ளக்கூடிய காணி விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 601 1135 077 703 7058

**காணிகள் விற்பனைக்கு உண்டு**
மருதனார்மடம், உரும்பிராய் வீதி 2 மற்றும் 1 3/4 பரப்பு.
திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்தி 1 பரப்பு 5.36 குளி காணிகள் விற்பனைக்கு உண்டு.
077 104 8865

**மணமகள் தேவை**
யாழ். இந்து, (V) கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1991 இல் பிறந்த தனியார் துறையில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 233 4168

**காணி தேவை**
பூநகரி, பரந்தன் பகுதிகளில் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணி தேவை. (10 பரப்புக்கு மேற்பட்டது)
தொடர்புகளுக்கு:- 077 082 1010

**Winrepiar**
உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C க்களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள் உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித்தருகிறோம்.
தொடர்புகளுக்கு: 076 834 6136

**காணி விற்பனைக்கு உண்டு**
நாவற்குழி சந்திக்கு அண்மையில் 4 பரப்புக் காணியும், கோவிலக்கண்டி சந்திக்கு அண்மையில் 60 பரப்பு நெற் காணியும் (நெற்பரப்பு) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 077 193 3490
Whatsapp 077 084 0453

**பணியாளர்கள் தேவை**
யாழ் திருநெல்வேலி பல்கலைக்கழக வீதி, மற்றும் இருபாலை சந்தி பருத்தித்துறை வீதியில் இயங்கும் எமது Cafe களிற்கு பணியாளர்கள் தேவை (ஆண்/ பெண்)
தொடர்புகளுக்கு: 077 772 9978, 077 050 0008
077 772 9978, 077 050 0008

**காணி விற்பனைக்கு உண்டு**
- யாழ்ப்பாணம் கைதடியில் 33 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A9 வீதி முகப்புடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை
- 20 அடி பாதையுடன்

தொடர்புகளுக்கு: 070 168 3354, 070 668 3354

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு, வாடகைக்கு

நல்லூர் நாவலர் வீதியில் Temple Road க்கு அருகில் 1.1/4 பரப்பு காணி விற்பனைக்கு.
மற்றும் Colombo வெள்ளவத்தையில் 640,1150,1350 Sqft Apartments.
பம்பலபிட்டியில் 1170Sqft Apt.
தெஹிவளையில் 1180 Sqft 3BR.
கல்கிஸையில் 3pஇல் தனிவீடு.11pஇல் 4Unit மாடிவீடு Galle Rdக்கு அருகில் 400m. 02BR, 02BathR for Rent in **Wellawatte .**

தொடர்பு - **0771153715**

(cr.43404) (N-1)

## விற்பனைப்பிரதிநிதிகள் தேவை

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் இயங்கிவரும் எமது FAB LANKA(PVT)LTD நிறுவனத்திற்கு தகுதி வாய்ந்த விற்பனைப் பிரதிநிதிகளை எதிர்பார்க்கின்றோம். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **077 006 9333**

(CS/56427) J-1

## லைடன் புடவை நிலையம் யாழ்ப்பாணம்

எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் அனைத்து வகையான துணி வகைகள், ரெடிமேற் ஆடைகள், மகபேற்றுத் தாய்மார்கள், குழந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் மாணவர்களுக்கான சீருடை துணிவகைகள் போன்ற அனைத்து விதமான பொருட்களையும் 10% விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள்.

**10%** 12.10.2024 - 30.10.2024

**Leyden Textile Center**
**410 Hospital Road, Jaffna.**
**021 222 2381**


## மரண அறிவித்தல்



தோற்றம்
28 . 04 . 1934

மறைவு
10 . 10 . 2024

### கந்தசாமி இராஜேஸ்வரி

கொக்குவில் மேற்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராஜேஸ்வரி கடந்த (10.10.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தாமோதிரம்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன், ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சன், ஸ்ரீதயாளன், சுமதி, வதனி, ஸ்ரீநந்தன், நந்தினி, ஜெயமணி, ராகினி, ஸ்ரீகுமரன், ஸ்ரீஜீவன், ஜெயந்தினி, காலஞ்சென்றவர்களான ஸ்ரீபாலன், ஸ்ரீவிஜயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சிதமலர், நாகேஸ்வரி, சிலோன்மணி, சந்திரமலர், தர்சினி, நளினி, சிவரஞ்சினி, ஆறுமுகராசா, முருகமூர்த்தி, சிவஞானம், கனகநாயகம், சத்தியேந்திரன், இளமுருகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், முரளிதரன், சசிதரன், பிரபாகரன், ஹரிகரன், பகிரதன், கிருபாகரன், பிரியா, பிருந்தா, துஷ்யந்தன், சர்மினி, சதீசன், சர்வேஸ்வரன், வசந்தன், டிலக்ஷன், மிதுரஜன், மிதுஜனா, மிதுசனா, மிறோஜன், மிறோஜிகா, சபேஸ்வரன், சகிலா, சர்மிளா, சதீஸ், பிரதீபன், நிஷாந்தினி, பார்த்தீபன், பிருந்தினி, டிலக்சிதா, சிவதர்சினி, செந்தூரன், சயந்தன், சாந்தினி, சுவேந்திரன், சாந்தனா, மிக்கேஸ், சுவீட்டி, யதுசன், அக்ஷயன், சாருஜன், கம்சாயினி, ஓவியாஞ்சலி, யுவேதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், துஷாகரன், வைஷ்ணவி, அக்ஷயா, அக்ஷரா, சஞ்சனாஸ்ரீ, பிரசாந், பிரியங்கா, அபிசயன், சயன், அக்ஷயா, சாங்கயன், சர்வின், நிவேதா, சஞ்சீவ், ஜீவிதா, பவியா, பிரியா, அகாஷ், அபினாஷ், அஸ்வினா, நிக்சா, நதீஸ், சாயிஷன், தபிசாயினி, துஷாந், ஆதிலன், தினோஜன், ஆகாஷ், ஆருஷன், ஆரபி, நிருபா, ரிஷாந்தன், ஆயுஷன், ஆதீஸ், ஆரணி, ஆனோய், ஆருத்ரா, சாய்தேவ், தாங்கஜன், சர்வின், அச்சு, சாத்வீக், பிரிஷா, சிறீசா, சபரீஷன், அக்ஷயன், அதேன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13.10.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு,**
**கேணியடி.**

(CS 8602) N-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


## தேவை

**யாழ்நகரில் இயங்கும் பிரபல கல்வி நிறுவனமான சயன்ஸ் வேல்டுக்கு** கணினி அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.
அத்துடன் பகுதி நேர சுத்திகரிப்பாளர் தேவை.

**074 056 7791**

(cs.433691) (N-1)

## வீடு விற்பனைக்கு

யாழ்பபாணம், நல்லூர் கோவில் வீதி - அம்மன் வீதியில் புத்தம் புதிய வீடு 1 1/2 பரப்பும் 1 1/2 குளியும் விற்பனைக்குண்டு.

- 3 அறைகள் - 2 இணைந்த குளியலறையுடன் 1 Open குளியலறை வசதி
- சுற்று மதில்
- முழுமையாக மாபிள் பதிக்கப்பட்டுள்ளது
- 2 கார்கள் நிறுத்தக் கூடிய இடவசதி

**074 221 8745 / 075 670 1631**

(cs.56388) (N-1)

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரி, நுணாவில் பகுதியில் இயங்கி வரும் ரயர் கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர். தங்குமிட வசதி மற்றும் உணவு வசதி வழங்கப்படும்.

**077 846 7615, 075 846 7613**

(CS/56430) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய், கோப்பாய் பிரதான வீதியில் பாரதி கடை அருகில் வடக்கு நோக்கி உள்ள காப்பற் கிளை வீதியில் 200 m தூரத்தில் வீதி முகப்பாக 21 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.

- நன்னீர், மின்சாரம் நல்ல சுற்றாடல்
- **சிறு துண்டுகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.**
- **வீடு, தொழில் கட்டடம் அமைக்க உதவும்.**
- **தரகர் தவிர்ப்பது விரும்பத்தக்கது.**

**தொடர்புகளுக்கு:**
**076 607 7660, 077 271 9826**

(CR/433891) J-1

## காணி விற்பனைக்கு

பாடசாலை வீதி, காங்கேசன் துறையில் (யா/நடேஸ்வராக் கல்லூரிக்கு அருகில்) வீடு பயன்தரு மரங்கள், நன்னீர் வெட்டுக்கிணற்றுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு:

**077 886 3041, 021 224 1144**

(CS/56435) J-1


## சிறுவர்தின நிகழ்வு இன்று

யாழ்., ஒக். 13

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் சிறுவர் தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் செல்வமாலினி மணிசேகரன் கலந்து கொள்ளவுள்ளார். (ச)

## குருதிக் கொடை!

கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்துக்கு அருகாக இடம்பெறவுள்ளது.

(ம-22-66)


## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் புதிய பழைய கட்டடங்கள், கோவில் வில்லு மண்டபங்கள், கொங்கிறீட் சிலம்புகள் அனைத்திற்குமான நீர் கசிவை தடுப்பதற்கும் மற்றும் வீடுகளில் ஏற்படும் வெடிப்புகளை உத்தரவாதத்துடன் சீர்செய்தும் தருவோம். நீங்களும் இரசாயன பொருட்களை பெற்றும் சீர்செய்யலாம்.
(கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு விசேட விலைக் கழிவு உண்டு)
10 வருட உத்தரவாதம் உண்டு (உலகத்தரம் மிக்க Finex ஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகத்தர்கள்)
முதன் முதலில் வடமாகணத்தில் அறிமுகம் செய்தவர்கள்

**North and East Engineering**
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

FINEX

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
**V2 Travels**
**0768226244**

## SPOKEN & GRAMMAR ENGLISH Classes

Grade 7 to GCE OL, Advanced level, Graduates தொழில் புரிவோர்
பேசப்பழக சிறந்த வகுப்புகள்
யாழ் இந்து வீதியில்
K.Ganesh B.A **077 766 8725**

(cr.434021) (N-1)

## வேலைக்கு ஆட்கள் தேவை

கணனி அறிவு உடையவர்கள் தொடர்பு கொள்ளவும்.
ஜனா பிறிண்டர்ஸ்

**077 073 1654, 077 272 9186**

(CS/56444) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல தொழிற்சாலை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

- பொதி செய்பவர்கள்
- பெண்கள்- 30 இற்குள், ஆண்கள் 18-21 இற்குள் விரும்பத்தக்கது.

(CS/56413) J-1

**076 368 1315**

## மாபிள் சுத்திகரிப்பாளர்

மாபிள் சுத்திகரிப்பாளர் (Marble Cleaning) சகல விதமான மாபிள் வேலைகளும் மிகவும் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

**074 066 9311**

(CS/56432) J-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a News

மலை… வள்ளுவர் ஆ… புரட்டாதி 27 ஞாயிற்றுக்கிழமை (13.10.2024) சிகரம் : 222

இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம்.

—நாலடியார்




# தெள்ளும் வேண்டாம் தேர்தலும் வேண்டாம்!

நிலாந்தன்

கடந்த 15 ஆண்டுகளில் எல்லா ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் தமிழ் மக்கள் யாரைத் தோற்கடிக்க வேண்டும் என்று தீர்மானித்து,திரண்டு வாக்களித்தார்கள். அங்கே ஒரு திரட்சி இருந்தது.அதேசமயம் ஏனைய தேர்தல்களில் குறிப்பாக, நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களைத் திரட்ட முடியவில்லை.தமிழ் மக்கள் சிதறி வாக்களித்தார்கள்.இம்முறை தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உடைவானது அந்தச் சிதறலை மேலும் அதிகப்படுத்துமா?

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தியபொழுது "தேசமாகத் திரள்வோம்" என்று கூறப்பட்டது.ஆனால் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிகளாகச் சிதறுவோம் அல்லது குழுக்களாகச் சிதறுவோம் அல்லது கட்சிக்குள் அணிகளாகச் சிதறுவோம் அல்லது சுயேச்சைகளாகச் சிதறுவோம் என்ற கோஷத்தை முன்வைக்க வேண்டி வருமா?

நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால் தமிழ்த்தேசிய அரசியல் களம் அப்படித்தான் காட்சி தருகின்றது. தேசியவாத அரசியல் என்பது மக்களைத் திரளாகக் கூட்டிக்கட்டுவது. மக்களை கூட்டுணர்வின் அடிப்படையில் ஒரு தேசமாகத் திரட்டுவது. ஆனால் கட்சிகள் மத்தியில் கூட்டுணர்வு இருந்தால்தான் அவை மக்களைக் கூட்டிக்கட்ட முடியும்.கட்சிகள் மத்தியில் அது இல்லையென்றால் எப்படி மக்களைத் தேசமாகத் திரட்டுவது?

உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி ஒரு தனிநபரின் கருவியாக மாறி அந்தத் தனிநபரை வெல்ல வைப்பதற்காக அவருடைய விசுவாசிகளை வேட்பாளர் பட்டியலில் சேர்த்திருக்கின்றது.அந்த விசுவாசிகள் தமக்கு விசுவாசமான தலைவருக்காக வாக்குகளைச் சேகரித்துக் கொடுப்பார்கள்.ஒரு மூத்த கட்சியானது வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொழுது என்னென்ன அளவுகோல்களை வைத்து அதைச் செய்திருக்க வேண்டும் ?

ஆனால் அதைக் கேள்வி கேட்க வேண்டிய மூத்தவர்களும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக்குள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிறீதரனும் என்ன செய்கிறார்கள்? சிறீதரனுடைய ஆதரவாளர்கள் ரஜினிகாந்தின் படத்தில் வரும் ஒரு பஞ் டயலாக்கை பரவலாகப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். "சிங்கம் எப்பொழுதும் சிங்கிளாகத்தான் வரும். பன்றிகள்தான் கும்பலாக வரும்" என்ற வசனம் அது.அதாவது தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சி சிங்கங்களும் பன்றிகளுமாக,சிவஞானம் கூறுவதுபோல "அறுவான்களும் குறுக்கால போவான்களுமாக" சிதறிப்போகிறது என்று பொருள்.அது தேசியக் கூட்டுணர்வோடு ஒரு திரட்சியாக இல்லை.

வேட்பாளர் பட்டியல் வெளிவந்ததிலிருந்து கட்சிக்குள் மகளிர் அணியும் தவராசா அணியும் ஏனைய அணிகளும் நொதிக்கத் தொடங்கிவிட்டன. தவராசா அணி சுயேச்சையாகப் போட்டியிடுகின்றது. இவ்வாறு தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பூசல்கள் ஏற்கனவே தூர்ந்து போன கட்சியை மேலும் சிதைக்கக்கூடும். அவ்வாறு தமிழரசுக் கட்சி பலவீனமடையும் பொழுது அதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறு கட்சிகள் அல்லது வேறு கூட்டுக்கள் உண்டா?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தேசியவாத அரசியல் குறித்த பொருத்தமான நடைமுறைச் சாத்தியமான தரிசனங்களைக் கொண்டிராத ஒரு கட்சி.தங்களைத் தியாகிகள் ஆகவும் புனிதர்களாகவும் காட்டுவதற்காக மற்றவர்களுக்குத் துரோகிப் பட்டம் சூட்டும் ஒரு கட்சி.தன்னை புத்திசாலிகள், கொள்கைவாதிகளின் கட்சியாகக் காட்டிக்கொள்ளும் ஒரு கட்சி. தேசம் என்பது புனிதர்கள், தியாகிகள், கொள்கைவாதிகளை மட்டும் கொண்டதல்ல. திருடர்கள், அயோக்கியர்கள், சமானியர்கள் என்று எல்லா வகைப்பட்டவர்களினதும் திரட்சிதான் தேசம்.முன்னணியின் அரசியல் பெருந்திரட்சிக்கு உரியதல்ல.அதனால் முதன்மைக் கட்சியாக மேலுயர முன்னணியால் இதுவரை முடியவில்லை.

அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியமானவற்றுக்கூடாகத்தான்கொள்கையைப் பரவலாக்கலாம், மக்கள் மயப்படுத்தலாம்,அதை ஒரு திரண்ட அரசியல் சக்தியாக மாற்றலாம்.தூய தங்கத்தை வைத்துக்கொண்டு ஆபரணம் செய்ய முடியாது.அதில் செம்பு கலக்க வேண்டும். செம்பைக் கலக்காவிட்டால் தங்கம் பிரயோகநிலைக்கு வராது. அப்படித்தான் நடைமுறைச் சாத்தியமாகச் சிந்திக்காவிட்டால் கொள்கை மக்கள் மயப்படாது.இதுதான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் உள்ள பிரதான பலவீனம். அவர்களால் தேசத்தைத் திரட்ட முடியாது.எனவே தமிழரசுக் கட்சி சிதையும் போது ஏற்படும் வெற்றிடத்தில் ஒரு பிரதான நீரோட்டக் கட்சியாக மாறி ஆசனங்களைக் கைப்பற்றத் தேவையான அரசியல் தரிசனமும் நெகிழ்வும் முன்னணியிடம் இல்லை.

அடுத்தது குத்துவிளக்குக் கூட்டணி. அந்த கூட்டணி ஜனாதிபதித் தேர்தலின் பின் சங்குச் சின்னத்தை கைப்பற்றிய தன்மூலம் சங்குக் கூட்டணியாக மாறியிருக்கிறது. அங்கேயே சர்ச்சைகள் உண்டு. ஒரு கூட்டு வெற்றியை அதன் பங்காளிகளில் ஒரு பகுதி மட்டும் சுவீகரிக்கப் பார்க்கின்றது. சங்கு இப்பொழுது தமிழ்த் தேசிய பொதுக்கூட்டமைப்பின் சின்னம் அல்ல. ஏனெனில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு இப்பொழுது இல்லை. அதற்குள் இருந்த தமிழ் மக்கள் பொதுச் சபை தேர்தலில் ஈடுபடவில்லை.தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் தமிழ் மக்கள் கூட்டணியும் அக்கூட்டுக்குள் இல்லை. எனவே சங்கு பொதுக்கட்டமைப்பின் சின்னமல்ல.சங்குக்கு விழுந்த 2 இலட்சத்து 26 ஆயிரம் வாக்குகளும் சங்கச் சின்னத்தை எடுத்து வைத்திருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு கிடைக்குமா?

சங்குக்கு விழுந்த வாக்குகள் தேசத் திரட்சிக்கு விழுந்த வாக்குகள்.அதில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தேசத் திரட்சி என்ற அடிப்படையில் வாக்களித்திருக்கிறார்கள்.அரியநேந்திரன் ஒரு குறியீட்டு வேட்பாளர். ஏறக்குறைய ஒரு துறவிபோல அவர் தேர்தலில் நின்றார். அவருக்கு வாக்குத் திரட்டுவதற்காக மக்கள் அமைப்பை சேர்ந்தவர்கள் துறவிகளைப்போல சம்பளம் வாங்காமல் இரவு பகலாக வேலை செய்தார்கள்.அவரை வேட்பாளராக முன்னிறுத்திய பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தலை நோக்கித்தான் உழைத்தன என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனாலும் பொதுவேட்பாளரை நோக்கி அவர்கள் திரட்டிய வாக்குகள் பொதுவானவை. பொதுவான வாக்குகள் இப்பொழுது ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பாக உள்ள சங்குக் கூட்டணிக்கு மட்டும் கிடைக்குமா?

கிடைக்காது. உதாரணமாக, கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சி சங்குக்காக வேலை செய்தது.அது முழுமையாக வேலை செய்ததா இல்லையா என்ற கேள்வி ஒருபுறமிருக்க, அங்கு கிடைத்த வாக்குகளுக்குள் தமிழரசு கட்சியின் வாக்குகளே அதிகம் உண்டு. எனவே சிறீதரனா? சங்கா? என்று வரும் பொழுது சிறீதரனின் ஆதரவாளர்கள் அவருக்குத்தான் வாக்களிப்பார்கள்.

அப்படித்தான் மட்டக்களப்பிலும் அரியநேந்திரனுக்காக சிறீநேசன் உட்பட பல மூத்த தமிழரசுக் கட்சிக்காரர்கள் ஒன்றாக நின்று உழைத்தார்கள். தங்களில் ஒருவருக்கு அவர்கள் பொதுவாக வாக்குத் திரட்டினார்கள். ஆனால்,நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களுடைய வாக்குகள் வீட்டுக்குத் தான் விழும்.சங்குக்கு அல்ல. அப்படித்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அருண் தம்பிமுத்து திரட்டிய வாக்குகளும் சங்குக்கு விழாது.

மேலும் யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சரவணபவன்,தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் உட்பட பலரும் சங்கின் வெற்றிக்காக உழைத்திருக்கிறார்கள்.அவர்கள் சங்கு கூட்டணிக்குள் நிற்கவில்லை.மாறாக தவராசா தலைமையிலான சுயேச்சைக் குழுவாகக் களமிறங்குகிறார்கள்.அவர்கள் சங்குக்கு திரட்டிய வாக்குகள் இனி அவர்களுடைய சுயேச்சைக் குழுவுக்குத்தான் அதிகமாக விழும்.

அப்படித்தான் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் சுயேச்சையாக நிற்கும் தமிழர் சம உரிமை அமைப்பும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்காக விசுவாசமாக உழைத்தது. அந்த அணி இப்பொழுது சுயேச்சையாகக் கேட்கின்றது. எனவே பொது வேட்பாளருக்காக அவர்கள் சேகரித்த வாக்குகள் அந்த சுயேச்சைக்கு விழுமா அல்லது சங்குக்கு விழுமா? தமிழ் மக்கள் சின்னத்தைப் பார்த்து மயங்குவார்களா?

இதுதான் பிரச்சினை.ஒரு சன்னியாசி போல அரியநேந்திரன் தேர்தலில் நின்ற பொழுது தமிழ் மக்கள் கூட்டுணர்வோடு அவருக்கு வாக்களித்தார்கள்.அதே கூட்டுணர்வோடு இப்பொழுது வாக்களிக்கமாட்டார்கள்.கட்சி விசுவாசம், தனிநபர் விசுவாசம்,பிரதேச விசுவாசம்,ஊர் விசுவாசம் போன்ற பல காரணிகளாலும் வாக்குகள் சிதறடிக்கப்படும் ஆபத்து அதிகமுள்ள ஒரு தேர்தல் இது.மேற்சொன்ன அனைத்து விசுவாசங்களும் தேசியக் கூட்டுணர்வுக்கு விரோதமானவை.பொது வேட்பாளருக்கான தேர்தலில் பிரசாரப் பணிகள் தொடங்கிய போது "எமக்காக நாம்" என்று கூறப்பட்டது. ஆனால் நடக்கவிருக்கும் தேர்தலில் "எனக்காக நான்" என்பதுதான் நடைமுறையாக உள்ளது.

அடுத்தது, விக்னேஸ்வரனின் கட்சி. அது இப்போதைக்கு பிரதான நீரோட்டக் கட்சியாக பலமாக எழும் என்று நம்பமுடியாத ஒரு கட்சிச் சூழல்தான் காணப்படுகிறது. நடக்கவிருக்கும் தேர்தல் அந்த கட்சியின் அடுத்தகட்ட வளர்ச்சியைக் காட்டும். தொகுத்துப்பார்த்தல், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் மட்டும் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சங்குக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி, ஜே.வி.பி.யின் கூட்டணி, சுயேச்சைக் குழுக்கள் என்று மொத்தம் 44 தரப்புகள் தமிழ் வாக்குகளைக் கேட்கப் போகின்றன. இதில் அநுர அலை எந்த அளவுக்கு வாக்குகளைக் கவரும் என்பதை இப்பொழுது மதிப்பிடுவது கடினம்.

இப்படி ஒரு நிலையை கிழக்கில் அனுமதித்தால்,குறிப்பாக திருகோணமலையிலும் அம்பாறையிலும் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும் என்ற அச்சம் அங்குள்ள சிவில் சமூகங்களிடம் உண்டு. திருகோணமலையில் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயர் இது தொடர்பில் தலையிட்டிருக்கிறார். அங்கே போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டுள்ளது. அதனால் வாக்குகள் சிதறுவது தடுக்கப்பட்டு குறைந்தபட்சம் ஒரு பிரதிநிதித்துவமாவது பாதுகாக்கப்படலாம்.ஆனால் அம்பாறையில் நிலைமை அவ்வாறில்லை.

ஆகமொத்தம் வரும் நாடாளுமன்றத் தேர்தலானது தமிழ் மக்களை வாக்காளர்களாகச் சிதறடிக்கப் போகிறது.சில கிழமைகளுக்கு முன்பு தேசமாகத் திரள்வோம் என்ற கோஷம் ஜனாதிபதித் தேர்தலில் பலமாக ஒலித்தது.ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கட்சிகளாகச் சிதறும் ஆபத்தே அதிகரித்து வருகின்றது. எனது நண்பர் ஒருவர் பின்வருமாறு கேட்டார் "இப்படியே சிதறிப் போனால் சனங்கள் 'தெள்ளும் வேண்டாம் நாயும் வேண்டாம்' என்று தேர்தல் அரசியலில் சலிப்படையக்கூடுமா? "



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அதிகரித்து வரும் இரவு உணவகங்கள்;

## காலமாற்றமா? கலாசார மாற்றமா?

இளங்கோவன் நிரோஷிகா
*யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,*
*ஊடக கற்கைகள் துறை மாணவி*



ஒரு நாட்டில் ஏற்படும் கலாசார மாற்றமா னது மற்றைய நாடுகளில் பரவி அது அந்நாட்டின் கலாசாரமாகவே மாறிவிடுகிறது. நம் இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. உணவு, உடை, அலங்காரம் என பல விடயங்களில் நாகரிகங்களை உள்வாங்கி நம் நாட்டு மக்கள் அதன்வழி சாய்கின்றனர். அவ்வாறே இன்று நம் நாட்டில் இரவு உணவகங்கள் அதிகரித்துள்ளன. பல வீடுகளில் இப்போது சமையல் அறைகள் பூட்டியே கிடக்கின்றன.

ஆரம்ப காலங்களில் வீடுகளில் இரவு வேளைகளில் அனைவரும் ஒன்றாக சமைத்து உணவுகளை உட்கொள்ளும் நடைமுறை எல்லாம் இன்று காணாமல் போய்விட்டது. அதற்குப் பதிலாக குடும்பமாகவோ அல்லது தனித்தனியாகவோ இரவு நேரங்களில் திறந்திருக்கும் உணவகங்களுக்குச் சென்று சாப்பிடுவதே வழக்கமாகிவிட்டது.

ஆரம்ப காலத்தில் வீட்டில் தரையில் அமர்ந்து வாழை இலையில் சாப்பிட்ட நாம், இரவில் வீட்டு முற்றத்தில், மொட்டை மாடியில் என இளங்காற்றில் மிதந்துகொண்டே நிலாச்சோறு சாப்பிட்ட நாம் , இன்று சிறு வெளிச்சத்தில் கண்ணாடி மேசையில் அமர்ந்து விதவிதமான பீங்கான்களில் பீட்சா, பேர்கர், நூடில்ஸ்,கிரில் சிக்கன், கொத்து என பல உணவுகளை உண்கின்றோம். இதனையே இந்தக்கால சமூகம் அதிகம் விரும்புகிறது. முக்கியமாக திருமணமாகி தனிக் குடும்பமாக வாழ்பவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விடுதியில் தங்கியிருப்பவர்கள், இரவுநேர வேலைக்குச் செல்பவர்கள், காதலர்கள், நண்பர்கள் என பலர் இரவு நேரங்களில் வெளியில் சென்று உணவகங்களில் சாப்பிடுவதையே வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

பகல் முழுவதும் வேலைக்குச் சென்று இரவு நேரங்களில் வீட்டுக்கு வருபவர்கள் வேலையால் ஏற்பட்ட களைப்பை போக்கவும் மனதை சற்று இதமாக்கவும் இரவு நேரங்களில் கடைக்குச் செல்கின்றார்கள். பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் நண்பர்களுடன் ஒன்றாக இணைந்து வெளியில் சென்று சாப்பிடுவதையே அதிக அளவில் விரும்புகிறார்கள். அதிலும் இரவு நேரங்களின் போது வெளியில் சென்று சாப்பிட்டுக் கொண்டே கதைகள் பேசுவது அவர்களுக்கு ஒருவித ஓய்வு மனநிலையைக் கொடுக்கிறது.

சொந்த வாகனங்களிலோ , பேருந்துகளிலோ அதிக தூரம் பயணிப்பவர்கள் இரவு நேரங்களில் சாப்பிடுவதற்காக இந்த இரவு உணவகங்கள் இயங்குகின்றன. இவ்வாறான இரவு நேர உணவகங்களில் அதிகமாக மாப் பொருட்களிலான உணவுகளே சமைக்கப்படுகின்றன. இது உடலுக்கு கேடு விளைவிக்கக்கூடியது என்று தெரிந்தும் நாம் அதனையே விரும்புகிறோம். கொழும்பு, யாழ்ப்பாணம், பதுளை போன்ற பெரிய நகரங்களில் இன்று இது ஒரு கலாசாரமாகவே ஆகிவிட்டதை நாம் காணக்கூடியதாக உள்ளது. நள்ளிரவு நேரங்களில்கூட மின்விளக்கு வெளிச்சத்தில் இந்த இரவுநேர உணவகங்கள் மின்னுகின்றன. இன்று பெண்களும் இரவுநேர உணவகங்களுக்குச் சென்று சாப்பிடுவதை எதிர்பார்க்கிறார்கள். மேலும் குடும்ப உறுப்பினர்களோடு கிழமை நாட்களில் ஒரு நாளிலேனும் இரவு வேளைகளில் வெளியே சென்று சாப்பிடுவதை புதியதொரு வழக்கமாக்கி விட்டனர். இதனாலேயே இப்போது இரவு நேரங்களில் உணவகங்கள் அதிகமாகத் திறக்கப்படுகின்றன.

விரும்பியவர்களோடு சென்று இரவு நேரங்களில் சிறிய மின்விளக்கு வெளிச்சத்தில் அமர்ந்து சாப்பிடுவது ரம்யமான ஒரு அனுபவத்தை எமக்கு அளிக்கிறது.

இது புதிய கலாசாரமாக இருந்தாலும் இன்று இயந்திரத்தனமாக ஓடிக்கொண்டிருக்கும் மக்கள் . இரவு நேரத்தில் கூட , வீட்டில் தன் குடும்பத்தோடு கூடியிருந்து உணவருந்தமுடியாதளவுக்கு வாழ்க்கையோட்டம் அவசரப்படுத்தும் இன்றைய காலகட்டத்தில் தன் குடும்பத்தோடு இரவு நேரங்களில் வெளியில் சென்று மனதிற்கு இதமளிக்கக்கூடிய சூழலில் இரவு உணவை உண்ணும் பழக்கமானது நம்மை குடும்பத்தோடு ஓரளவு ஒன்றித்திருக்கச்செய்கிறது எனலாம். மேல்தட்டு மக்கள் மட்டுமன்றி இன்று சாதாரண மக்கள் கூட இரவு நேர உணவகங்களுக்கு சென்றே உண்ண விரும்புகின்றனர்.

அதன் விளைவாகவே இன்று இலங்கையில் மாத்திரமல்லாமல் யாழ்ப்பாணத்திலும் கூட புதிது புதிதாக பல்வேறு நட்சத்திர உணவகங்கள் எழுந்துள்ளதை எம்மால் காணக் கூடியதாக உள்ளது. வேலைகளின் நடுவே வாழ்க்கை பயணம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தாலும் நமக்கான நேரங்களை ஒதுக்கி பணத்தை செலவு செய்தேனும் ஒரு சிறந்த அனுபவத்தினை பெறுவதே இன்றைய கால சமூகம் விரும்புகிறது. இதைக் காலமாற்றமென்று சொல்வதா? கலாசார மாற்றமென்பதா?

> ஆரம்ப காலங்களில் வீடுகளில் இரவு வேளைகளில் அனைவரும் ஒன்றாக சமைத்து உணவுகளை உண்ணும் முறை எல்லாம் இன்று காணாமல் போய்விட்டது. அதற்குப் பதிலாக குடும்பமாகவோ அல்லது தனித்தனியாகவோ இரவு நேரங்களில் திறந்திருக்கும் உணவகங்களுக்குச் சென்று சாப்பிடுவதே வழக்கமாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகை ஆட்டிப்படைக்கும் உளநலப்பிறழ்வுகள்; தவிர்த்தலும், குணப்படுத்தலும்

கலாநிதி க.கஜவிந்தன்
சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர்
மெய்யியல் – உளவியல் துறை
யாழ் .பல்கலைக்கழகம்



நாம் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளினால் ஏற்படும் மன அழுத்தங்களுக்கு நாம் மனநிறைவுடன் பொருத்தப்பாடு (adjustment) மேற்கொள்ளும் திறமையே உளநலம் என்று வரையறை செய்துள்ளனர்.

'உளநலவியல்' என்பது பொருத்தப்பாடு, நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக நாம் மேற்கொள்ளும் வழிமுறையாகும். தன்னுடன் ஒத்திசைவையும், சமூக நல்லிணக்கத்தையும் உருவாக்கும் ஒருவரின் திறமை உளநலமாகும். இலங்கையில் மக்கள் தொகைக்கு ஏற்ப, உள ஆற்றுப்படுத்துநர்களின் எண்ணிக்கை இல்லை. சில ஆற்றுப்படுத்தல் வளவாளரிடம் ஆற்றுப்படுத்தலுக்குத் தேவையான அடிப்படைத் தகுதி இல்லாத காரணத்தால் உளநலம் பாதித்தவர்களை குணமாக்குவதற்குப் பதிலாக மனப்பாதிப்பை அதிகரிக்கச் செய்துவிடுகிறது.

### உளநலமுள்ளவரின் சில குணநலன்கள்

- உளநலமுள்ளவர்கள் வாழ்க்கையிலும் சாதகமான மனப்போக்கினைக் கொண்டிருப்பர்
- அவர்கள் மிகுந்த நல்லிணக்கம் உடையவராக, பிறரைப்பற்றிக் குறைகூறாமல் இருப்பர்.
- மனநிறைவுடையவராக இருப்பர்.
- தம்முடைய நிறைகளையும், குறைகளையும் அறிந்திருப்பர்.
- நிலைத்திருக்கக்கூடிய மனவெழுச்சியும், மகிழ்ச்சியும் உடையவராக, நியாய உணர்வும், சகிப்புத்தன்மையும் பெற்றிருப்பர்.

ஆரோக்கியமான மனிதர் என்பவர், நல் ஆரோக்கியம் மட்டுமன்றி உளநலமும் பெற்றிருத்தல்அவசியமாகும். ஆரோக்கியம் என்ற தற்கால விளக்கம் உடலில் சீரான இயக்கத்தை மட்டும் குறிக்கவில்லை. அது மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தவல்ல வலிமையையும் உள்ளடக்கியதாகும். உடல் நலத்தைப் பாதுகாக்கவும், சமூகத்தில் திறமையுடன் செயற்படவும் இன்றியமையாத அடிப்படைக்கூறு உளநலமாகும். உளநலம் இரு முக்கியமான கூறுகளைக் கொண்டது.

1. உளநலமுள்ளவர் தன்னுள்ளேயே ஒத்திசைவும், நல்லிணக்கமும் உடையவராக இருப்பர்.
2. உளநலமுள்ளவர் தாம் வாழும் சமூக அமைப்பிலிருந்து தன்னம்பிக்கை பெறுவார்.

இத்தகைய சமூக அமைப்பு ஒத்திசைவையும், நல்லிணக்கத்தையும் வளர்க்கிறது. சமூக சக்திகள் மாறும் தன்மை கொண்டமையால் சகிப்புத்தன்மை, பொருத்தப்பாடு, வளர்ச்சி போன்றவற்றை உள்ளடக்கிய நல்லிணக்கத்திலிருந்தே உளநலம் உருவாதல் வேண்டும். மனிதருடைய உளநலமும் காலத்துக்குக் காலம் மாறுபடுகிறது. பெரும்பான்மையானோருக்கு உளப்பாதிப்பு சிறிதுநேரம் வந்துபோகும். ஆனால் சிலருக்கோ இந்த அனுபவம் மிகவும் வித்தியாசமானதாக அமைந்துவிடுகிறது.

உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்தப்பாதிப்பின் தீவிரத்தன்மையைப் பொறுத்து பலவிதமான அறிகுறிகள் ஏற்படும். உதாரணமாக, கவலை என்பது தற்காலிகமான சாதாரணமான ஒரு துன்ப உணர்வாகவும் வரலாம் அல்லது வாழ்க்கை முழுவதையுமே பாதிக்கின்ற பெருந்துயரமாகவும் வரலாம். உலகில் மன நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆனால் இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப் போதிய வசதிகள் இல்லை என்பது வேதனைக்குரியது. மக்கள் தொகைக்கு ஏற்ப தகுந்த உள மருத்துவர்கள் உளநலம் பாதிக்காமல் இருக்க. மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இசை கேட்பது, விளையாடுவது. நண்பர்களுடன் கலந்துரையாடுவது. உடற்பயிற்சி, யோகா, தியானம் செய்வதுடன் மற்றவர்களுடன் பழகவேண்டும். தனிமையைத் தவிர்க்க வேண்டும்.

சமூகத்தில் காதல் திருமணம் செய்பவர்களில் பலர் எதிர்காலத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாமல் உளநலம் பாதிக்கப்படுகின்றனர். மேலும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களும் உளநலப் பாதிப்புக்கு ஆளாகின்றனர். உளநலப் பாதிப்பில் ஆண்களும், பெண்களும் சமமாகவே உள்ளனர். அதே நேரத்தில் மன அழுத்தத்தில் ஆண்களை விட பெண்களே அதிகம் பாதிக்கப்படுவதாகப் புள்ளி விவரம் தெரிவிக்கிறது. தற்கொலை எண்ணங்கள். நோய்கள் போன்றவற்றிற்கு மன அழுத்தம் காரணமாகிறது. மன அழுத்தத்தால் ஆண்களைவிட பெண்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டாலும் நம் சமுதாயத்தில் பெண்களை விட ஆண்களே அதிகமாகத் தற்கொலைசெய்துள்ளதாக புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. இதற்குக் காரணம் காதல் தோல்வி, கடன் சுமை, விரக்தி, ஏமாற்றம், குடும்பச்சண்டை, சந்தேகம் போன்றவையாகும். பொதுவாக இதன் பாதிப்பு பெண்களிடம் 50 சதவிகிதம் அதிக தாக்கத்தை உண்டாக்குகின்றது பொதுவாக 20 சதவீத மனநோய்கள் வெளிப்படையாகத் தெரியலாம். மிகுதியுள்ள 80 சதவீதத்தினரை அவர்களது நடவடிக்கைகள் மூலமே அறியமுடியும். மன நலப் பாதிப்பால் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் கூட அதிகளவில் தற்கொலைக்கு முயல்கின்றனர். மக்கள் தொகையில் 60 லட்சம் குழந்தைகள் மனநோயால் பாதிக்கப்பட்டு இருப்பதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. தற்போது உலக மக்கள் தொகையில் 35 கோடி பேர் மனஅழுத்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.

மன அழுத்தப் பாதிப்பு அதிகரித்து வருவதன் காரணமாக நம் நாட்டில் தற்கொலை எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும். உலகளாவிய ரீதியில் ஆண்டு தோறும் மன அழுத்தத்தால் 10 லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். சராசரியாக தினமும் 3 ஆயிரம் பேர் தற்கொலை செய்து இறக்கிறார்கள். இந்த எண்ணிக்கைக்கு 20 மடங்கு அதிகமாக தற்கொலை முயற்சிகளும் நடக்கின்றன. அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். அல்லது அவர்களது முயற்சி தோல்வி அடைகிறது. பொதுவாக 32 வயதைக் கடந்தவர்கள் மன அழுத்தத்துக்கு அதிகம் உள்ளாகின்றனர். இனிவருங்காலத்தில் ஏற்படும் நோய்களுக்கான பெரிய காரணமாக மன அழுத்தம் ஆதிக்கம் செலுத்தக்கூடும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை செய்கின்றனர். மன அழுத்தத்துக்கான சிறந்த சிகிச்சை முறைகள் இருந்த போதிலும், பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைபெற முன் வருவதில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். ஒருவருக்கு ஏற்பட்டுள்ள மனநோய் எவ்வகையானது என்று உறுதியாக மருத்துவ ரீதியில் தீர்மா னிப்பதற்கு உளநல நிபுணர்களுக்கே சில காலம் எடுக்கும். மனநோய்கள் தொடர்பாக சமூகத்தில் இன்றளவும் நிலவும் தவறான எண்ணங்கள் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய மோசமான பின்விளைவுகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, ஒருவருக்கு வந்துள்ள மனநோய் இன்னதென்று அவசரப்பட்டு முத்திரை குத்த உளவியல் நிபுணர்கள் தயங்குவார்கள். வந்திருப்பது எவ்வகையான மனநோய் என்பதைத் தீர்மானிப்பதை விட பாதிக்கப்பட்டவருக்கு எவ்விதமான தேவைகள் உள்ளன என்பதை அடையாளம் கண்டு, பொருத்தமான மருந்துகள், உளவியல் சிகிச்சைகள், சமூகத்தின் ஆதரவு ஆகியவை மூலமாக அவரது பிரச்சினைகளைத் தாமதமின்றி குணப்படுத்துவதுதான் மிகவும் முக்கியம்.

### உளநோய் தொடர்பான பொதுவான புரிதல்கள்

- மனநோய் என்பது மனிதருக்கு வரக்கூடிய ஒரு பொதுவான பிரச்சினை. ஏதாவது ஒரு வகையிலான மனநோய் நான்கு பேரில் ஒருவர் என்ற அளவில் வரவே செய்கிறது.
- மனநோய் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். மனச்சிதைவு நோய் ஏறத்தாழ நூற்றில் ஒருவருக்கு அவரது வாழ்நாளில் ஏதாவது ஒருகட்டத்தில் வருவதாகத் தெரியவருகிறது.
- மனநோய் வந்தவர்களால் அதிலிருந்து முழுமையாகக் குணமடையவும் அர்த்தமுள்ள வாழ்க்கையை அவர்களால் திரும்ப வாழவும் முடியும்.
- ஒருவருக்கு மனநோய் இருந்தாலும், அது பலகாலம் வெளியில் தெரியாமலே இருக்கும்.
- மனநோய்களை ஒன்றை ஏனையவற்றிலிருந்து தெளிவாகப் பிரித்துப் பார்ப்பதென்பது அனைத்து நேரத்திலும் சாத்தியமாகாது. அதேபோல மனநோய் வந்தவர்களுக்கு மருத்துவரீதியில் என்ன நோய் வந்திருக்கிறது என்று தெளிவாகவும் மாற்றமில்லாமலும் கூறுவதும் சிரமம்.


ஆகவேதான் தீவிர மனநோய் குறித்து மருத்துவ ரீதியில் தெளிவான மாதிரிகளை உருவாக்குவது என்பது ஓரளவுக்கே சாத்தியம். தமக்கு வந்துள்ள மனநோய்க்கான மருத்துவப் பெயர் தெரியவரும்வரையில், தாம் அனுபவிக்கும் கஷ்டங்கள் தொடர்பில் உதவியையும் ஆதரவையும் நாடுவதற்கு ஒருவர் காத்திருக்கக் கூடாது.

*(மிகுதி அடுத்த வாரம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு என்னும் ஆட்கொல்லி



இலங்கையில் மிக விரைவாக அதிகளவில் பரவுகின்ற தொற்று நோயாக டெங்கு நோய் விளங்குகின்றது. யாழ். மாவட்டத்திலும் டெங்கு நோயின் தீவிர நிலை காணப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டு 4870 நோயாளர்கள் ஆறு மர்ணங்களும் ஏற்பட்டுள்ளது. இந்த வருடம் (2024) 5261 நோயாளர்கள் இனங்காணப்பட்டதுடன் ஒரு மரணமும் ஏற்பட்டுள்ளது. பருவ கால மழை ஆரம்பித்த நிலையில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. நோயாளர் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதைக் காணமுடிகின்றது.

டெங்குக் காய்ச்சல் நுளம்பினால் பரப்பப்படும் ஒரு வைரஸ் நோயாகும். வைரஸ் தொற்றுக்குள்ளான பலர் எந்தவித நோய் அறிகுறிகளையும் வெளிப்படுத்தமாட்டார்கள். ஒரு சிலருக்கு டெங்குக் காய்ச்சலாகவோ டெங்கு இரத்தக் கசிவுக் காய்ச்சலாகவோ, டெங்கு அதிர்ச்சி நிலையாகவோ மாறலாம்.

நான்கு டெங்கு வைரஸ் கிருமிகள் காணப்படுவதனால் ஒருவருக்கு அவருடைய வாழ்நாளில் ஒரு தடவைக்கு மேல் டெங்கு நோய் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. டெங்கு நோயின் தாக்கம் பரந்துபட்டதாக ஒரு நபர் இரண்டாவது தடவையாக டெங்குக் காய்ச்சலுக்குள்ளாகும் போது டெங்கு குருதிப்பெருக்குக் காய்ச்சலின் கடுமையான தாக்கங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகமாகும். எனவே ஆரம்பத்திலேயே மருத்துவ ஆலோசனையைப் பெறுவதும், இரத்தப் பரிசோதனை செய்தலும், நோய்காலம் முழுவதும் கவனிப்பு மேற்கொள்ளப்படுமானால் பெரும்பாலான உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

ஒருவருக்கு டெங்கு வைரஸினால் ஏற்பட்ட காய்ச்சல் எனில் அதனைக் கவனிக்காமல் இருக்கும் பட்சத்தில் உடம்பிலுள்ள குருதித் திரவங்கள் வெளியேறி அவரை அபாய நிலைக்கு இட்டுச் செல்லும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

### டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகளாவன:

கடுமையான தலையிடி,தசை வலி, உடம்பு வலி, உடலில் சிவப்பு நிறப் புள்ளிகள் தோன்றுதல், கண் பின்புறத்தில் ஏற்படும் வலி, குமட்டல், வாந்தி.

### டெங்கு அபாய நிலைக்கான அறிகுறிகளாவன:

வயிற்று வலி, பசியின்மை, மூச்சு விடுதலில் சிரமம், தொடர்ச்சியான வாந்தி, வயிறு வீக்கமாகக் காணப்படல், முரசிலிருந்து குருதி வெளியேறல், தீவிர உடல் இளைப்பு, சோம்பல் தன்மை, சிறுநீரின் அளவு குறைவடைதல், அதிகளவு வியர்த்தல்,பதற்றம். ஆறு மணித்தியாலங்களுக்கு மேல் சிறுநீர் வெளியேறாது இருத்தல்,கை கால் குளிர்தல்,குருதி கலந்த மலம்,வாந்தி போன்றன .

இதனால் ஆரம்பத்திலேயே தகுந்த மருத்துவ ஆலோசனை பெறுவதன் மூலம் மரணத்தில் இருந்து பாதுகாப்புப் பெறலாம்.

டெங்குக் காய்ச்சல் ஒரு சடுதியான காய்ச்சல் நிலையாகும். ஆனால் டெங்கு குருதிப் பெருக்கு காய்ச்சலானது டெங்கு நோயின் அதி தீவீரமான நிலையாகும். ஆரம்ப நிலையில் டெங்கு காய்ச்சலும் டெங்கு குருதிப் பெருக்கு காய்ச்சலும் வேறுவேறு வகையின. ஆனாலும் அவை பிரித்தறிய முடியாதவாறு ஒரே மாதிரியான அறிகுறிகளையே கொண்டுள்ளன. டெங்கு குருதிப் பெருக்கு காய்ச்சலில் காய்ச்சல் குறைவடைகின்ற மூன்றாவது நாளில் இரத்தக் குழாய்களில் இருந்து பிளாஸ்மா ஆனது நுரையீரலில் காணப்படும்.

இவ்வாறு தெடர்ச்சியான பிளாஸ்மா கசிகின்ற பொழுது அதனால் ஏற்படும் அதிர்ச்சியாலும், வயிற்றுப் பகுதியில் பிளாஸ்மா கசிந்தும் மரணம் சம்பவிக்கலாம். இதனைக் கண்டறிந்து சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படவேண்டும். ஆகவே நோயாளர்கள் ஆரம்பத்தில் அதிர்ச்சி நிலையில் ஈரல்,சிறுநீரகம் இதயம் என்பன செயலிழந்து மரணம் ஏற்படலாம்.

இவ்வாறான ஆட்கொல்லி டெங்கு வைரஸைப் பரப்பும் நுளம்பினை முறையான சுற்றுச் சூழல் முகாமைத்துவத்தைப் பின்பற்றுவதன் மூலம் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரலாம்.


முறையான சுற்றுச் சூழல் முகாமைத்துவம் என்பது நுளம்புக்குடம்பிகள் பெருகுகின்ற இடங்களான தேவையற்ற வெற்றுப்பாத்திரங்கள் எறியப்பட்ட பிளாஸ்ரிக் பீங்கான்கள், மற்றும் தகரப் பாத்திரங்கள், கூரைப் பீலிகள், நீர் தேங்கி நிற்கக் கூடிய இடங்கள் போன்றவற்றை அகற்றுவதன் மூலம் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்தைக் குறைத்து மனிதனுக்கும் நுளம்புக்கும் இடையிலான இடைத்தொடர்பைக் குறைக்கக் கூடியதாகச் சூழலை மாற்றியமைப்பதாகும். இந் நடவடிக்கையே டெங்கு நோயைத் தவிர்த்துக் கொள்வதற்கான நுளம்புக் கட்டுப்பாட்டின் பிரதான படியாக விளங்குகின்றது.

1. எமது சுற்றாடலில் பொதுவாக நுளம்பு பெருகும் இடங்களை கண்டு நீர் தேங்காதவாறு பாதுகாத்தல்
2. பிளாஸ்ரிக் பொருட்கள் பீங்கான் மற்றும் தகரப்பாத்திரங்கள் போன்றவற்றைச் சரியான முறையில் சூழலிலிருந்து அப்புறப்படுத்தல்,
3. நீ சேகரிக்கும், தொட்டிகள், பூச்சாடிகள், குளிரூட்டிகளின் அடித்தட்டுக்கள், எறும்புப் பொறிகள் போன்றவற்றை நன்கு தேய்த்துக் கழுவுங்கள்.
4. சிமெந்து பூசிய வடிகான்கள்,சிமெந்துத் தரையில் சேரும் நீர் கொங்கிறீட் கூரைகளை உரிய முறையில் நீரை வழிந்தோடச் செய்தலும் கூரைப் பீலிகளைக் கிரமமாகச் சுத்தம் செய்தலும்.
5. பாவித்தபின் வீசப்படும் பாத்திரங்களைக் குறைத்தல் மீள்பாவனை மீள்சுழற்சி மூலமாக உரிய முறையில் திண்மக் கழிவுகளை அகற்றுதல்,
6. பாவித்த ரயர்கள் வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் தோட்டத்தில் பாவிக்கும் பாத்திரங்களை நீர் தேங்காதவாறு முறையாகக் களஞ்சியப்படுத்தல்.
7. இரும்பு மற்றும் உலோகப் பொருட்களிலுள்ள குழிகளுக்கு சிமெந்து எண்ணெய் இடுவதன் மூலம் அடைத்தல் அல்லது நிரப்புதல்.
8. மூங்கில் மரங்களைக் கணுக்களில் வெட்டுதல் அல்லது மூங்கில் குழல்கள் மற்றும் மரப்பொந்துகளுக்கு மண் அல்லது சிமெந்து இட்டு நிரப்புதல்.
9. மரப்பொந்துகளில் மண்ணை நிரப்புதல் அல்லது அதனை இல்லாது செய்தல்
10. கரடுமுரடான சிமெந்து நிலங்களில் நீர் தேங்கி நிற்காதவாறு பராமரித்தல்
11. வீட்டின் மேற்புறம்,வீட்டின் உட்புறம்,வெளிச் சுற்றாடல் போன்றவற்றைத் தொடர்ச்சியாக அவதானித்து நீர் தேங்கியிருப்பின் அதனை உடனடியாக அகற்ற நீர் சேகரிக்கும் பாத்திரங்களை மூடி வைத்தல்.
12. கிணறுகள் மற்றும் சிறு நீர்த் தேக்க அழகுத் தடாகங்களில் மீன்கள் வளர்த்தல்.
13. நீர் தேங்கக் கூடிய இடங்களை இனங்கண்டு சுத்தம் செய்தல்

எமது சுற்றாடலை எல்லோருமாக இணைந்து சுத்தமாகப் பேணி, கொடிய டெங்கு காய்ச்சலில் இருந்து எமது மக்களை பாதுகாப்போம். எமது கரங்களில் எமது சுற்றாடல்.

***பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்.***


**ஒருவருக்கு டெங்கு வைரஸினால் ஏற்பட்ட காய்ச்சல் எனில் அதனைக் கவனிக்காமல் இருக்கும் பட்சத்தில் உடம்பிலுள்ள குருதித் திரவங்கள் வெளியேறி அவரை அபாய நிலைக்கு இட்டுச் செல்லும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மருத்துவ வரலாற்றை மாற்றிய அமெரிக்க மருத்துவர் கிறீன்

O பா. துவாரகன்



(10.10.1822 – 28.05.1884)

**ஒக்ரோபர் 10, 2024 அன்று மருத்துவர் சாமுவேல் பிஸ்க் கிறீன் அவர்களது 202 ஆவது பிறந்த தினம்.**

### அமெரிக்க மிஷனரிகளின் யாழ்ப்பாண வருகை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், இந்திய உபகண்டமும் ஆபிரிக்காவின் சில பகுதிகளும் சூரியன் மறையாத பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் கீழ் வருகின்றன. ஐரோப்பாவிலிருந்து கிறித்துவ மறை பரப்பும் மிஷனரிகள் ஆசியாவுக்கு வருகிறார்கள்.

பிரித்தானியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்த மிஷனரிகள் இலங்கைத் தீவுக்கும் வருகிறார்கள். இவர்கள் பிரித்தானிய ஆட்சிக்கு உட்பட்ட குடியேற்ற நாடுகளில் கிறித்துவ மறைபரப்புவதுடன் பாடசாலைகளை நிறுவி, கல்வி அறிவை வளர்ப்பதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டனர். இலண்டன் மிஷன், மெதடிஸ் மிஷன், வெஸ்லியன் மிஷன், அங்கிலிக்கன் மிஷன் முதலான மிஷனரிகள் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் சம அளவில் மிஷன் பணிகளில் ஈடுபட்டனர்.

இக்காலப் பகுதியில் அமெரிக்காவின் போஸ்டன் நகரில் இருந்த அமெரிக்க மிஷன் சங்கம் இந்தியாவுக்கு மிஷனரிகளையும், மருத்துவ மிஷனரிகளையும் அனுப்பியது.

இந்தியாவையும் இலங்கையையும் ஒரே குடையின் கீழ் நிர்வகித்து வந்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி அமெரிக்க மிஷனரிகளை ஆரம்பத்தில் இந்தியாவில் பணியாற்ற அநுமதிக்கவில்லை. இதனால் அமெரிக்க மிஷனரிகள் இலங்கைக்கு வருகிறார்கள். அமெரிக்க மிஷனரிகள் கொழும்புக்குச் சென்று பணியாற்ற விரும்பிய போதிலும், இலங்கையின் பிரித்தானிய ஆளுநர் யாழ்ப்பாணத்தில் மிஷன் பணியில் ஈடுபட மட்டுமே அமெரிக்கர்களை அனுமதிக்கின்றார். இதனால் யாழ்ப்பாணத்தில், வட இலங்கையில் கல்வி மறுமலர்ச்சி ஏற்படுகிறது. அமெரிக்கன் மிஷன் பாடசாலைகள் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் மட்டுமே தாபிக்கப்பட்டன. அமெரிக்க மிஷனரிகள் தாபித்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதலான அமெரிக்க மிஷன் பாடசாலைகள் 200 வருடங்கள் கடந்தும் இன்றும் புகழுடன் விளங்குகின்றன. யாழ்ப்பாணம் கல்வியில் உயர்நிலை அடைவதற்கு அமெரிக்க மிஷனரிகளே கால்கோள் இட்டன.

1819 ஆம் ஆண்டு அமெரிக்க மருத்துவ மிஷனரி மருத்துவர் ஜோன் ஸ்கடர் அவர்களது யாழ்ப்பாண வருகையுடன் இலங்கையின் வடபகுதியில் மேலைத்தேய மருத்துவம் அறிமுகமாகிறது.

### உலகின் முதல் மருத்துவ மிஷனரி மருத்துவமனை

மருத்துவர் ஜோன் ஸ்கடர் இலங்கையின் முதல் மருத்துவ மிஷனரியாக மட்டுமன்றி இந்தியாவின் முதல் மருத்துவ மிஷனரியாகவும் விளங்குகிறார். ஸ்கடர் யாழ்ப்பாணத்தில் பண்டத்தரிப்பு என்னுமிடத்தில் தனது சிகிச்சை நிலையத்தை(டிஸ்பென்சரி) 1820 இல் ஆரம்பிக்கிறார். இதுவே உலகின் முதல் மருத்துவ மிஷனரி மருத்துவமனை என்ற சிறப்பைப் பெற்றது.

ஜோன் ஸ்கடர் ஏறத்தாழ 16 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றினார். ஸ்கடர் இக்காலப் பகுதியில் வடபகுதியில் ஏற்பட்ட கொலரா, வாந்திபேதி முதலான தொற்று நோய்களுக்குச் சிகிச்சை அளித்து பல நூற்றுக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றினார்.

சில ஆண்டுகளின் பின்னர் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி அமெரிக்க மிஷனரிகளை இந்தியாவில் செயற்பட அநுமதித்தனர். இதனால் ஸ்கடர் இந்தியாவுக்கு மருத்துவ மிஷன் பணி ஆற்றச் செல்கிறார். ஸ்கடரைத் தொடர்ந்து மருத்துவர் நேத்தன் உவோட் மருத்துவ மிஷன் பணியாற்ற யாழ்ப்பாணம் வருகிறார்.

நேத்தன் உவோட் அவர்களது மறைவைத் தொடர்ந்து அமெரிக்க மிஷன் சங்கம் மருத்துவர் கிறீன் அவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியது.

### இலங்கையின் முதலாவது மருத்துவக் கல்லூரியை நிறுவிய மருத்துவர் கிறீன்

19 ஆம் நூற்றாண்டில் மனிதகுல வரலாற்றில் மாற்றத்தை ஏற்படுத்தியவர்களில் மருத்துவர் கிறீனுக்குத் தனித்துவமான இடம் உண்டு. இவர் ஏறத்தாழ 26 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் மருத்துவ மிஷன் பணியில் ஈடுபடுகிறார்.

கிறீன் இலங்கையின் முதலாவது மேலைத்தேச (ஆங்கில) மருத்துவக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் என்ற இடத்தில் 1848 இல் நிறுவினார். கிறீனது முதல் வகுப்பில் 3 மாணவர்கள் மருத்துவம் பயின்றனர்.

தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்ற கிறீன் ஆங்கில மருத்துவ நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபடுகிறார். கிறீனது மாணவர்களும் மொழிபெயர்ப்பில் ஈடுபடுகின்றனர். கிறீன் 1864 இல் தமிழ்மொழி மூலம் மேலைத்தேச மருத்துவம் கற்பிக்க ஆரம்பிக்கிறார். 1883 இல் மானிப்பாய் மருத்துவக் கல்லூரி மூடப்படும் வரை 113 வரையான மாணவர்கள் கிறீனது மருத்துவக் கல்லூரியில் பயின்று மருத்துவர்களாக வெளியேறினர்.

அமெரிக்க மருத்துவர் கிறீன் மானிப்பாயில் மருத்துவக் கல்லூரியை நிறுவி ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்குப் பின்னரே கொழும்பு மருத்துவப் பீடம் நிறுவப்பட்டது. இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானிய அரசு 1870 இல் கொழும்பில் மருத்துவக் கல்லூரியை நிறுவியது. இதுவே இன்று கொழுப்புப் பல்கலைக்கழகமாக வளர்ச்சியடைந்துள்ளது. தன்னிடம் மருத்துவம் பயின்றவர்கள் அரச உத்தியோகத்தை நாடியும் அதிக சம்பளத்தை எதிர்பார்த்தும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி அயல் தேசங்களுக்குச் சென்றதாலும் சுதேச மக்களுக்கு மருத்துவம் செய்ய மருத்துவர்களை உருவாக்கவேண்டும் என்று கருதி, தமிழில் மருத்துவம் போதிக்க ஆரம்பித்ததாக கிறீன் தனது கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார். இன்று யாழ். போதனா மருத்துவமனை என்ற பெயருடன் விளங்கும் மருத்துவமனையை 1850 இல் பிரித்தானிய குடியேற்ற நாட்டு அதிகாரி சேர். பேர்சிவல் அக்லண்ட் டைக் அவர்கள் மருத்துவர் கிறீனது உதவியுடன் ஆரம்பிக்கிறார். அன்று இந்த மருத்துவ மனையானது ஆபத்துக்குதவும் நண்பர்கள் கழக வைத்தியசாலை என்ற பெயருடன் விளங்கியது. கிறீன் மருத்துவராக மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற சத்திரசிகிச்சை வல்லுனராகவும் விளங்கினார்.

> I knew my beloved teacher and spiritual father, Dr. Green, from the year 1862. I was with him for ten years almost every day except Saturdays and Sundays. . . . . When he left Jaffna he put me to act in his place.
>
> *From Dr. Vaittilingam, alias, D. W. Chapman, Translator and Physician to the American Ceylon Mission.*
>
> The Doctor had in view to educate and give a physician to every ten thousand of the ten millions Tamil population. He has educated seventy-two men directly and sixty-two indirectly . . . . The Vernacular graduates have turned out successful practitioners.
>
> Source: Life and Letters of Samuel Fisk Green, M.D. of Green Hill Compiled by Ebenezer Cutler. D.D. ( Printed 1891)

மயக்க மருந்துகளோ நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளோ அறிமுகமாகாத 19ஆம் நூற்றாண்டில், சுதேச மருத்துவர்களால் (சித்த மருத்துவர்களால்) கைவிடப்பட்ட பலருக்கு மருத்துவர் கிறீன் சத்திரசிகிச்சை செய்து காப்பாற்றினார்.

19ஆம் நூற்றாண்டில் போஸ்டன் நகரிலிருந்து ஓர் அமெரிக்கர் நான்கரை மாதங்கள் பாய்மரப்படகில் ஆபத்து நிறைந்த சமுத்திரங்களைத் தாண்டிப் பயணஞ் செய்து, சென்னைப் பட்டினத்தை அடைந்து, அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து, தமிழ் கற்று, மேலைத்தேச மருத்துவ நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து, யாழ்ப்பாண மக்களுக்கு சேவை செய்ய ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவியமை சிந்தனைக்குரியது; நினைவுகூரப்படவேண்டியது.

எமது மக்களுக்கு மருத்துவம் செய்யத் தேவையான மருந்துகளையும் கருவிகளையும் கொள்வனவு செய்யவும், தமிழில் மருத்துவ நூல்களை அச்சிடவும் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் சென்று அமெரிக்கர்களிடமும் ஐரோப்பியர்களிடமும் எமக்காக மன்றாடி, நிதி திரட்டிய கிறீன் என்ற பெருமகனை, நோயுற்ற போது மருத்துவம் பார்த்து உயிர் காத்த உத்தமனை நாம் எப்போதும் நினைவிற் கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியிலே சேவை செய்யவல்ல மருத்துவர்களை அவர்கள் மத்தியிலே உருவாக்கவேண்டும் ஒரே காரணத்துக்காக மானிப்பாயில் மருத்துவக் கல்லூரியை நிறுவி பின்னர் தமிழைப் போதனா மொழியாக்கி ஆங்கில மருத்துவத்தின் பயனை எமது மக்கள் அனுபவிக்கக் காரணமாக இருந்த மருத்துவர் கிறீனை, அவர் பிறந்த 200 ஆவது ஆண்டில் முதற்றடவையாக யாழ். போதனா மருத்துவமனையில் நினைவு கூர்ந்தனர். யாழ். போதனா மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ அருங்காட்சியகத்தில் 2022 இல் நினைவு கூரல் நிகழ்வு மருத்துவமனைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

### மருத்துவர் கிறீனை நினைவுகூருவதற்கான வாசகங்கள் சில:

1. அமெரிக்க மிசனரி மருத்துவரான சாமுவேல் பிஸ்க் கிறீன் இலங்கையில் முதலாவது மேலைத்தேச மருத்துவக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் என்ற இடத்தில் 1848 இல் நிறுவினார். இதுவே இலங்கையின் முதலாவது மேலைத்தேச(அலோபதி) மருத்துவக் கல்லூரியாகும்.
2. மருத்துவர் கிறீன் தமிழ்மொழியைக் கற்றுத் தமிழில் சொற்பொழிவாற்றவும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கவும் கலைச்சொல்லாக்கவும் வல்ல தமிழ்ப் புலமையாளராக விளங்கினார்.
3. கிறீன் ஆங்கில மொழியிலிருந்த சில மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்ததுடன் வேறு சில அறிவியல் நூல்களையும், கலைச்சொல் அகராதிகள், மருத்துவக் கையேடுகள், கட்டுரைகள் முதலானவற்றையும் தமிழாக்கம் செய்துள்ளார்; கிறீனது மாணவர்களும் மருத்துவ நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தனர். இவை 4500 பக்கங்களில் வெளிவந்துள்ளன.
4. உலகிலே முதன் முதலில் 1864 ஆம் ஆண்டு தமிழ் மொழி மூலம் மேலைத்தேச மருத்துவம் மருத்துவர் கிறீன் அவர்களால் இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாய் மருத்துவக் கல்லூரியில் கற்பிக்கப்பட்டது.
5. 1850 முதல் 1907 வரையான காலப்பகுதியில் யாழ். போதனா மருத்துவமனையில் (யாழ்ப்பாணம் ஆபத்துக்குதவி வைத்தியசாலை) கடமையாற்றிய மருத்துவர்களிற் பெரும்பாலானோர் மருத்துவர் கிறீனது மருத்துவக் கல்லூரியில் பயின்றவர்களே.
6. உடல் வலிமை குறைந்தவராகவும் வாழ்வின் பெரும்பாலான காலப்பகுதியில் உடல்நலம் பாதிக்கப்பட்டு நோயுடன் போராடுபவராகவும் விளங்கிய கிறீன் பலமாதங்கள் கடற்பயணம் மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து மானிப்பாயிலே மருத்துவக் கல்லூரியை நிறுவி 26 வருடங்கள் யாழ்ப்பாணத்திலே பணியாற்றி பல்லாயிரக் கணக்கானவர்களுக்குச் சிகிச்சையளித்து உயிர் கொடுத்தார். இவர்களில் அநேகமானவர்களுக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
7. மருத்துவர் கிறீன் யாழ்ப்பாணத்தில் 1848 இல் மானிப்பாயில் நிறுவிய மருத்துவக் கல்லூரியில் 72 தமிழ் மாணவர்களுக்கு நேரடியாகத் தானே மருத்துவம் கற்பித்தும் மேலும் 62 இற்கும் மேற்பட்டவர்களுக்குத் தனது மாணவர்கள் மூலமும் பிற ஆசிரியர்கள் மூலமும் மருத்துவம் கற்பித்தும் யாழ்ப்பாணத்தில் மருத்துவர்களை உருவாக்கியிருந்தார்.



This photo depicts the first Medical Mission Dispensary of the World, founded at Pandatherippu in Jaffna, [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூர்விக மண் தேடி..!

சொக்கலிங்கம் லோஜினி
மூன்றாம் வருட மாணவி
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

காலம் தான் எத்தனை விசித்திரமானது. அந்தக் காலமெழுதிய விசித்திரக்கதைகளில் எனக்கும் ஓர் இடமுண்டு.

எனது பூர்வீகம் நெடுந்தீவு. ஆனால் நான் வசிப்பதோ புத்தளத்தில். என்றாலும் சொந்த இடத்து ஏக்கம் எப்போதும் அடிநெஞ்சில் ஒட்டியே இருக்கும். தானாடா விட்டாலும் தசையாடுமல்லவா. அதனால் சொந்தமண்ணை மறக்கக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு வருடமும் எனது குடும்பத்தார் அனைவரும் நெடுந்தீவு அந்தோனியார் கோயில் திருவிழாவில் கலந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஆனால் நாங்கள் சிறுபிள்ளைகள் என்பதால் எம்மை அந்தப் பயணத்துக்குக் கூட்டிச் செல்வதேயில்லை. இதனால் நெடுந்தீவு என்பது அருவ நிலைப்பட்ட ஊராகவே எனக்கு இருந்தது. அங்கு செல்லவேண்டும் என்ற கனவும் வளர்ந்தது. அந்தக் கனவு இந்த வருடம் தான் நனவானது.

இந்தவருடம் நெடுந்தீவு அந்தோனியார் கோயிலில் ஆவணிப்பெருவிழாவுக்கு நாங்கள் செல்வதென முடிவெடுத்தோம். ஒரு வாடகை வாகனத்தில் அதிகாலையே புத்தளத்தில் இருந்து புறப்பட்டோம். மதியம் தாண்டியே யாழ்ப்பாணத்துக்கு வரக்கூடியதாக இருந்தது. அப்படியே ஓய்வில்லாமல் குறிகாட்டுவான் நோக்கி விரைந்தோம். அங்கிருந்துதான் நெடுந்தீவுக்கு படகேற வேண்டும். படகைத் தவறவிட்டால், அடுத்தநாள் தான் போகலாம். அதனால் வாகனத்தை வேகப்படுத்தி, படகு புறப்படுமுன்னரே குறிகாட்டுவானை அடைந்த பின்னர் தான் கொஞ்சம் நிம்மதி பிறந்தது. படகு எம்மைச் சுமந்து கொண்டு, நீர்த்திவலைகளை எம்மீது தெறிக்கச் செய்தபடியே விரையத் தொடங்கியது. கிட்டத்தட்ட ஒருமணித்தியாலப் பயணம். ஆனால் அந்த ஒரு மணித்தியாலமும் ஒரு யுகம் போலவே கடந்தது.. காற்றுக்கு படகு மேலே எகிறுவதும், கீழே குதிப்பதுமாக ஒருவித திகிலோடுதான் வைத்திருந்தது. சிலருக்கு படகின் ஆட்டம், புதிய கடற்பயணம் என்பன ஒத்துக் கொள்ளவில்லை. அவர்களுக்கு தலைசுற்றி, வாந்தியெடுக்கத் தொடங்கிவிட்டனர். ஒருபக்கம் திகில், இன்னொரு பக்கம் அவதி, இன்னொரு பக்கம் மகிழ்ச்சி என பல வித உணர்வுகள் ஒரே நேரத்தில். படகு ஒருவாறு நெடுந்தீவுக்கரையை முத்தமிட்டது.

"அப்பாடா சொந்த ஊருக்குள் கால் பதித்து விட்டோம்" என்று அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தோம். அங்கு நாங்கள் தங்குவதற்கென்றே ஒரு வீடு உள்ளது. அந்த வீட்டில் கிட்டத்தட்ட 30 பேரும் நான்கு நாட்கள் ஒன்றாகத் தங்கி இருந்தோம். உறவினர்கள் அனைவரும் ஒரு குடும்பமாக இணைவது என்பது அழகிய தருணம். அந்தத் தருணத்தை எனது வாழ்நாளில் மறக்க முடியாது.

அந்த வீட்டில் இரவுப்பொழுதைக் கழித்து விட்டு மறுநாள் காலை எட்டாம் நாள் திருவிழாவைக்காண ஆலயத்துக்குச் சென்று விட்டோம். அங்கு வெளிநாட்டிலிருந்து வந்த உறவுகளை சந்தித்தோம். வழிபாடுகள் முடிந்தவுடன் வீடு திரும்பி அன்றைய இராப்பொழுதில் அனைவரும் ஒன்றுகூடி கூழ் காய்ச்சி சிரட்டையில் குடித்தோம். ஒன்பதாம் பெருநாளையும் பத்தாம் பெருநாளையும் இனிதாக கழித்துவிட்டு நெடுந்தீவினை சுற்றிப் பார்க்க ஆயத்தமானோம். முதலில் சென்ற இடம் "வெடியரசன் கோட்டை ". போர்த்துக்கேயர் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் இந்தக் கோட்டையில் இருந்தும் ஆட்சி செய்தார்களாம். வெடியரசன் என்ற மன்னன் ஆட்சி செய்த கோட்டை என்பதனால் தான் இதற்கு "வெடியரசன் கோட்டை" என்று பெயரும் வந்ததாம். இந்தக்கோட்டையானது சோழர் காலக் கட்டட முறையிலேயே கட்டப்பட்டிருந்தது. முருகைக் கற்களினாலானது. இங்கு பல சித்திரவேலைப்பாடுகளைக் அவதானிக்க முடிந்தது. இந்தக்கோட்டை மிகவும் அழிந்த நிலையிலேயே காணப்பட்டாலும் சுற்றுலாப் பயணிகளை கவரும் கலாசார சுற்றுலா மையங்களில் ஒன்றாக இருக்கிறது. கோட்டையின் ஒவ்வொரு பகுதிகளிலும் நின்று அனைவரும் புகைப் படங்கள் எடுத்துக்கொண்டோம். கோட்டைக்கு வெளியே குதிரைகளைக் கண்டோம். இவை நெடுந்தீவின் மற்றுமொரு சிறப்பம்சமாகும். அங்கு குதிரைகளை வைத்திருந்த உரிமையாளர் ஒருவரின் அனுமதியுடன் அதில் ஏறி சவாரி செய்தும் பார்த்தேன். குதிரைச்சவாரியின் போது என்னை ஒரு இளவரசியாக மனதில் கற்பனை செய்து கொண்டேன்.

இறுதியாக பெருக்குமரம் உள்ள இடத்துக்கு சென்றோம். நெடுந்தீவின் தனித்துவமான இடங்களில் இதுவும் ஒன்று. நெடுந்தீவு இறங்கு துறையிலிருந்து கிழக்காக சுமார் 2.5 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படும் இந்தப் பெருக்கு மரம் பலம் பொருந்திய யானைகள் ஒவ்வொரு திசையிலும் தம் துதிக்கைகளை நீட்டிக்கொண்டிருப்பது போன்று விசாலமாகக் காட்சி தந்தது. ஆறேழு பேர் உள்ளே சென்று நிற்கக் கூடியளவுக்கு மரத்தில் குகைபோன்ற அமைப்பு காணப்படுகின்றது. . எவ்வளவுதான் வெயில் வாட்டி வதைத்தாலும் உள்ளே குளிர்ச்சியான சூழல் நிலவியது. இயற்கையின் அற்புதங்களில் ஒன்றான பெருக்கு மரங்கள் வெப்ப மண்டலக் காடுகளில் வளர்கின்றன. இவற்றை பாபப் (பயழடியயடி) என்ற பொதுப்பெயரால் அழைக்கின்றனர். இலங்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பெருக்கு மரங்களே காணப்படுகின்றன. இதன் அடி மரம் மிகவும் விசாலமானது. இதன் பூக்கள் வெண்மை நிறமாகவும் காய்கள் வட்ட வடிவ பச்சை நிறமாகவும் இருந்தன. இதன் இலைகள் ஐந்தாகப் பிரிந்து மனித விரல்களைப் போல காட்சிதந்தன. மனிதனின் ஐந்து முக்கியமான நோய்களை இந்த மரம் குணப்படுத்துவதற்கான குறியீடுதான் இது என்று நெடுந்தீவு வாசிகள் கூறினர். குருதிப்பெருக்கம் , நரம்புத் தளர்ச்சி , அம்மை, இரத்த அழுத்தம் ,தொற்றுநோய் ஆகியவற்றுக்கு பெருக்கு மரத்தின் இலைகள், பட்டைகள், வேர்கள் போன்றவை பயன்படுத்துகிறார்களாம். சித்த மருத்துவத்தில் நோய் குணமாக்கும் மருந்துகளில் பெருக்கு மரம் பிரதான இடத்தை வகிக்கிறதாம். அதிக வெப்ப காலங்களில் கூட இவை தளர்ந்துவிடாது என்பதால் தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவும் காலத்தில் நம் முன்னோர்கள் இந்த மரத்தின் வேர்களைப் பிழிந்து சாறெடுத்துக் குடித்துள்ளனராம். இந்த வரலாற்றை அம்மாவிடம் கேட்டு அறிந்து கொண்டு பெருக்கு மரத்தின் அடியில் இருக்கும் குகை போன்ற பொந்துக்குள் நின்று புகைப்படம் எடுத்துவிட்டு வீடு நோக்கி திரும்பினோம்.

வீட்டிற்கு முன்னால் நின்ற ஆலமரத்தின் கீழ் அனைவரும் அமர்ந்து சமைத்து வைத்த உணவை குழைத்து கைகளில் வாங்கி உண்டோம். மரத்தின் கீழே சற்று ஓய்வேடுத்தோம். இராப் பொழுது ஆனதும் அங்கேயே நெருப்பு மூட்டி இரவு உணவை தயார்செய்து சாப்பிட்டு விட்டு ஆட்டம் பாட்டம் என குதூகலமாக இருந்தோம். நான்காவது நாள் அனைவரும் வீடு திரும்புவதற்கு தயாரானோம். மீண்டும் படகு, வாகனப் பயணம் என புத்தளம் நோக்கிப் புறப்பட்டோம். ஆனால் மனதுக்குள் நெடுந்தீவின் நினைவுகளே முழுமையாக நிறைந்து [illegible]

டிலீப் அமுதன்

# அயல் தேசத்தில் சில நாள்கள்... 6



கொல்கொண்டா கோட்டையின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று அதன் ஒலி அமைப்பு. நான் விசேடமான இடம் என்று குறிப்பிடும் இடத்திலிருந்து கைதட்டினால் நீண்ட தூரம் அது கேட்கும் வகையில் கட்டடக் கலை வடிவமைக்கப்பட்டுள்ளது. தாக்குதலின் போது மக்களுக்கு சமிக்ஞை செய்வதற்கும் எச்சரிக்கை செய்வதற்கும் இது பயன்படுத்தப்பட்டதாகச் சொன்னார். இன்றைய காலத்தைப்போல அன்று தொழில்நுட்ப வசதிகள் இருக்கவில்லை. கைதட்டல் கூட தகவல் பரிமாற்ற முறையாக இருந்தது.

கோட்டையில் பல அரண்மனைகள், தோட்டங்கள் மற்றும் தர்பார் ஹோல், குதுப் ஷாஹி கல்லறைகள் மற்றும் தாராமதி மசூதி போன்ற கட்டமைப்புகள் உள்ளன. ரோயல் பலஸ் மற்றும் நீர் வழங்கல் அமைப்பு அவற்றின் பொறியியல் மற்றும் கட்டடக்கலை என்பன அந்தக் காலத்துக்கு அறிவுக்கு சான்று பகர்பவையாக இருந்தன. இதேநேரம், 1997ஆம் ஆண்டு மணிரத்தினம் இயக்கிய இருவர் படத்தின் சில காட்சிகள் இந்த கொல்கொண்டா கோட்டையில் படமாக்கப்பட்டிருக்கின்றன.

கோட்டையினுள் ஒவ்வொரு பகுதியாக நுழையும்போது ஆச்சரியமிக்கதாக அல்லது பிரமிப்பூட்டும் வகையிலும் அதன் கட்டடக் கலை இருந்தது.

கோட்டையினுள் அமைக்கப்பட்ட கட்டடங்கள் கல்லுகள் வைத்துத்தான் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தக் கற்களுக்கு இடையில் எந்தவொரு பூச்சும் இல்லை. கற்களால் ஆன வளைவுகளும் இருக்கின்றன. கற்களை மண்ணின் மீது அடுக்கி, அந்தக் கல்லுகளைப் பொருத்திவிட்டு பின்னர் அந்த மண்ணை அகற்றி இவ்வாறு கட்டப்பட்டிருக்கலாம் என நம்பப்படுவதாக சுற்றுலா வழிகாட்டி சொன்னார்.

கோட்டையின் உள்புறமும் மிகப்பிரமாண்டமான கோட்டைச் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவை பெரிய கல்லுகளைப் பிளந்து ஆனால் தற்போதுள்ள தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதைப்போன்று கட்டப்பட்டிருந்தன. அந்தக் காலத்தில் கல்லுகளைப் பிளப்பதற்காக, அந்தப் பெரிய பாறைகளின் நடுவே மரத்தடிகளை வைப்பார்களாம். அந்த மரத்தடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவார்களாம். அவை தண்ணீரால் விரிந்து - வீங்கிவரும்போது பாறைகள் மெல்ல மெல்ல பிளவடையுமாம். அவ்வாறுதான் கட்டியதாக வழிகாட்டி குறிப்பிட்டார். கோட்டையினுள் சிறைக்கூடமும் இருக்கின்றது. அது முழுமையான பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டிருக்கின்றது. அதன் மேலே ஓர் சதுர ஓட்டை விடப்பட்டிருக்கின்றது. அதன் ஊடாகத்தான் சிறைக்குள் அடைக்கப்பட்டிருப்பவர்களுககு சாப்பாடு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சிறையில் கோட்டையின் கணக்காளர் பணத்தைத் திருடியதற்காக மன்னன் அடைத்துவிட்டானாம். அவர் சிறைக்குள் இருந்து, சிறையின் பாறைக் கற்களைச் செதுக்கி அம்பாளை வழிபட்டிருக்கின்றார். அவை இப்போதும் இருக்கின்றன. நாமும் அதனைச் சென்று பார்வையிட்டதுடன் வழிபட்டோம்.

கோட்டையின் உச்சியை நோக்கிச் செல்ல எங்களுக்கு மூச்சிரைக்கத் தொடங்கியது. ஆனாலும் சோராமல் ஏறிக்கொண்டேயிருந்தோம். சுற்றுலா வழிகாட்டி எங்களை விரைவாக ஏறும்படி கூறிக்கொண்டேயிருந்தார். இரவு 7 மணிக்கு கீழே லேசர் சோ ஆரம்பமாகும். அதற்கு முன்னதாக பி.ப. 6.30 மணிக்கு முன்னர் கோட்டையைவிட்டு அனைவரும் வெளியேறவேண்டியிருக்கும். அதனால்தான் அவர் விரைவுபடுத்தினார்.

கோட்டையின் ஒவ்வொரு தளமாக ஏறிஏறிச் செல்லும்போது மேலிருந்து ஹைதராபாத் நகரின் அழகை ரசிக்கும்போது சிறப்பாகத்தான் இருந்தது. நாங்கள் பழைய காலத்துக் கோட்டையிலிருந்து நவீன கட்டடங்களுடனான ஹைதராபாத் நகரத்தைப் பார்த்தோம்.

கோட்டையின் உச்சியில் ஜகதாம்பாள் ஆலயம் அமைந்திருக்கின்றது. ஆலயத்துக்கு கோபுரமில்லை. ஆனால் இங்குள்ள காவல் தெய்வங்களுக்கான ஆலயம்போன்று சிறியதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. நாங்கள் அங்கு சென்றடைந்த நேரம் பூசகர், பூசைகளை முடித்துக்கொண்டு தீர்த்தம் வழங்கினார். அதையும் பெற்றுக்கொண்டு கோட்டையின் உச்சியான பாலா ஹிசார் பவிலியனைச் சென்றடைந்தோம். அங்கிருந்து சுத்தமான காற்றைச் சுவாசித்தபடி நகரத்தின் அழகை ரசித்தோம். நீண்ட நேரம் அங்கு நிற்க முடியவில்லை. ஏறுவதற்கு 45 நிமிடங்கள் எடுத்திருந்தன. கீழே சென்றடைய சுமார் 20 நிமிடங்களாவது தேவை என்பதால் வழிகாட்டி விரைவாக கீழே இறங்கச் சொன்னார்.

நாங்கள் எல்லோரும் வேகமாக கீழிறங்கினோம். மாலை மங்கும் நேரத்து அந்தக் காட்சிகளை ஒளிப்படங்களாக 'சுட்டபடி' கீழிறங்கினோம். இரவு 7 மணிக்கு கோட்டையின் கீழ்த்தளத்தில் - நிலப் பகுதியில்- அழகான புற்றரையில் கதிரைகள் போடப்பட்டிருந்தன. அதிலிருந்து கோட்டையின் முழுத் தோற்றத்தையும் பார்வையிட முடியும். சரியாக 7 மணிக்கு 'லேசர் ஷோ' ஆரம்பமானது.

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பற்றியெரிந்த படகுத்துறை;

## பதைபதைக்க வைத்த ஒருநாள்!



எஸ். கிரிஸ்டினா
மூன்றாம் வருட மாணவி
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

அப்போது நான் இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலையில் தரம் - 3 இல் கல்வி கற்றுக்கொண்டிருந்தேன். எங்கள் சொந்த இடம் இலுப்பைக்கடவையல்ல, எங்கள் குடும்பப் பொருளாதாரக் காரணிகளே எங்களை இலுப்பைக் கடவையில் உள்ள படகுத்துறை என்ற குக்கிராமத்தில் குடியேற்றின. அங்கே கடற்றொழிலுக்கு ஏற்ற சாதகங்கள் இருந்ததால், அப்பா படகுத்துறையில் வசிப்பதென முடிவெடுத்தார். இயற்கையான சூழல், கடற்கரைக் காற்று என ரம்மியமான சூழல் அங்கிருந்தாலும் தண்ணீர் என்பது அங்கு அரிதான பொருளாக இருந்தது. தண்ணீருக்காக நாங்கள் பலமைல்கள் அலையவேண்டி இருந்தது. அத்தோடு கடைகள், பாடசாலை , அலுவலகங்கள் எல்லாம் இலுப்பைக்கடவை பிரதான வீதிக்கு அண்மையில் அமைந்திருந்தமையால் , அங்கு அடிக்கடி செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டது. என்றாலும் சொந்தங்கள் பந்தங்களோடு அந்த வாழ்வு ஆனந்தமாகவே இருந்தது. அந்த ஆனந்தமான வாழ்வைப் புரட்டிப் போட்ட நாள்தான்,

முதல்நாள் தான் புதுவருடப்பிறப்பை குதூகலத்துடன் கொண்டாடி மகிழ்ந்திருந்தோம், அத்தோடு புதிய வகுப்புக்குச் செல்லப்போகின்றோம் என்ற ஆனந்தமும் ஒட்டிக் கொள்ள, பாடசாலைக்குச் செல்லவென அதிகாலையிலேயே எழுந்து தயாராகி விட்டேன். வழக்கம் போல அண்ணாவின் சைக்கிளில் நான் ஏறியிருக்க, அவன் என்னோடு நேற்றைய புதுவருட அனுபவத்தை சொல்லியபடியே பாடசாலையில் இறக்கி விட்டான். துள்ளிக்குதித்தபடி நானும் புதிய வகுப்பறையை நோக்கி ஓடினேன். ஆனால் ஏமாற்றமே காத்திருந்தது. கோட்டக்கல்வி அதிகாரி ஒருவர் காலமாகிவிட்டதால் பாடசாலை நடைபெறாதாம். இனியென்ன செய்வது? என்னைப்போலவே புதிய வகுப்புக்குச் செல்லும் ஆசையோடு வந்த நண்பிகளோடு கொஞ்சநேரம் அளவளாவி விட்டு, வாடிய முகத்தோடு வீடு வந்து சேர்ந்தேன்.

அந்தநாள் அந்தச் சோகத்தை விட இன்னொரு பயங்கரத்தையும் எனக்கு காண்பிக்கப் போகின்றது என்பதை அப்போது நான் உணர்ந்திருக்கவில்லை. அன்று காலையில் இருந்தே எங்கள் பகுதியில், போர் விமானங்கள் அடிக்கடி பறந்தபடி இருந்தன. போர்க்காலம் என்பதால், இப்படி போர் விமானங்கள் வட்டமிடுவது எங்களுக்கும் பழகிப் போயிருந்தது. ஆனால் அந்தப் பொல்லாத இரும்பு வல்லூறுகள் அன்றைக்கு எமது கிராமத்தைத் தான் தம் இரையாகத் தீர்மானித்திருந்தன என்பதை நாங்கள் யாரும் ஊகித்திருக்கவில்லை. மிக் விமானங்களில் ஒரு பொல்லாத குணம் என்னவெனில், அவை ஒலியை விடவும் வேகமாக இயங்கக்கூடியவை. அதனால் மிக் விமானங்கள் ஓர் இடத்தைக் கடந்த பின்னரே அவற்றின் ஒலியை அங்கு உணரமுடியும். அதனால் அவற்றை வைத்தகண் வாங்காமல் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தால் மட்டுமே, எங்கே போகின்றன, வருகின்றன என்று கண்டுபிடிக்க முடியும். நான் அச்சத்தால் அம்மாவுடன் ஒரு மரத்தின் கீழ் பதுங்கிக் கொண்டு விமானத்தை நோட்டமிட்டுக்கொண்டிருந்தேன். எங்களுக்கு அருகில் அண்ணாவும், இன்னும் சில உறவினர்களும் தற்காப்புக்காக தஞ்சமடைந்திருந்தனர். அப்போதுதான், சாதாரணமாக வான்பரப்பில் வட்டமிட்டுக் கொண்டிருந்த இரண்டு மிக் ரக போர் விமானங்கள் திடீரெனப் பேய் பிடித்தது போல, நாங்கள் வசித்த பகுதியை மட்டும் இலக்கு வைத்து உறுமிக் கொண்டு, குத்திட்டு கீழே எம்மில் முட்டிவிடும் தூரத்துக்கு இறங்கி குண்டுகளை எச்சமிட்டு விட்டு மேலெழுந்தன.

" டுடுடும்ம்ம்ம்ம்"

அந்தப் பகுதியே வெடிகுண்டுகளின் ஓசையால் அதிர்ந்து புழுதி கிளம்பியது. எங்கும் ஓலம், கதறல். பல வீடுகள் சிதறிப் போயின, இன்னும் சில இடங்கள் கருகிப் போயின. எங்கும் ரத்தமும், சதையும், சடலங்களும், காயப்பட்டோரின் கதறலுமாக நாங்கள் இருந்த சூழல் ஒரு சுடுகாடாக ஒரே கணத்தில் மாறியிருந்தது. எங்கும் புகைமண்டலம். நான் சுயநினைவுக்கு வர சில நிமிடங்கள் பிடித்தன. என் மேல் மூடியிருந்த மண்ணை விலக்கிக் கொண்டு, என்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறதென அவதானித்தேன். அங்கே

அம்மாவும், அண்ணாவும் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள். பதறிக்கொண்டு அவர்களருகே ஓடினேன். நல்லவேளையாக, அவர்களுக்கு காயம் மட்டுமே ஏற்பட்டிருந்தது. அண்ணாவுக்குத்தான் தோள்பட்டையில் பெரிய காயம். அதிலிருந்துதான் குருதி நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தது. உடனேயே அந்தக் காயத்தைச் சுற்றி துணியால் கட்டினோம். இரத்தப் போக்கு ஓரளவுக்கு கட்டுப்பட்டது. இந்த அமளிக்குள் எங்கள் அப்பா எங்கே எனத் தெரியாமல் கலங்கிப் போய், அவரைத் தேடி கடற்கரையை நோக்கி ஓடினோம். ஆனால் அவரைத் தேடுவது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. அந்தளவுக்கு குண்டுமாரி பொழிந்தபடி இருந்தது. அந்தக் குண்டுகளுக்குள் சிக்காமல் முன்னகர்வது பெரும்பாடாயிருந்தது. மரங்களின் கீழும், நீருக்குள்ளும் பதுங்கி, பதுங்கியே கடற்கரையைச் சென்றடைய முடிந்தது. கடற்கரையும் குண்டுவீச்சுக்குத் தப்பவில்லை. அங்கும் ஒரே புகைமண்டலம். அந்தப் புகைமண்டலத்துக்குள் ஒருவாறு அப்பாவைக் கண்டுவிட்டோம். உடனடியாக வள்ளத்தில் அங்கிருந்து வேறெங்காவது செல்வதே பாதுகாப்பானது என முடிவெடுத்து, படகை இயக்க முயன்றார் அப்பா. ஆனால் அதற்குள் அண்ணா அதிகளவு இரத்தப்போக்கால் மயங்கிச் சரிந்துவிட்டான். அதனால் அவனையும், அம்மாவையும் உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சிறிது நேரத்துக்குள் அங்கு மன்னார் ஆயராக இருந்த இராயப்பு ஜோசப் வந்துவிட்டார். அவர் எங்கள் ஊரில் நடந்த அக்கிரமத்தை வெளியுலகுக்கு கொண்டு செல்ல, குண்டுவீச்சு நிறுத்தப்பட்டது. ஆனால் அதற்குள் ஊரே மயானமாக மாறிவிட்டது. அந்த ஒருநாளில் நடந்த கோரத்தில் 15 பேர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். எனது அண்ணா, அம்மா உட்பட 50 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். 3 பேருக்கு கால்களும் பறிபோயிருந்தன. அதன் பின்னர் மெல்ல அந்தக் கிராமத்தை விட்டு நாங்கள் நகரத் தொடங்கினோம். போரும் எங்களை ஓரிடத்தில் இருக்கவிடாமல் துரத்திவிட்டது. ஒரு அழகிய கிராமத்தை போர் ஒட்டுமொத்தமாக தின்று தீர்த்துவிட்டது. இப்போதும் படகுத்துறையைத் தாண்டிச் செல்லும் போதெல்லாம் அன்றைய நாளின் குண்டுகளின் ஓசையும், மரண ஓலமும் இன்னமும் என் காதில் கேட்டபடியேதான் இருக்கின்றன.

# உணர்ந்தினம்

## பாகம் 3

இராகவன்

இன்னும் அறுவது கிழமையள் உங்களோட கதைக்கப்போறன் எண்டதில மன மகிழ்ச்சி. முந்தினபாகங்களில கதைக்கத் தவறின விசயங்களை இந்தப்பாகத்தில கதைக்கலாம் எண்டிருக்கிறன். இப்பதான் நவராத்திரி முடிஞ்சது. அதுக்க தீபாவளியும் வரப்போகுது. நவராத்திரி எண்டதுமே எனக்கு மாணிக்கவாசகர் பள்ளிக்கூடத்தில படிச்சகாலந்தான் உடன நினைவில வந்து நிக்குது.

அந்தக்காலத்தில எங்களுக்கெல்லாம் நவராத்திரி வந்தால் ஒரே எழுப்பந்தான். காலமை பள்ளிக்கூடத்துக்கு வந்தோண்ண வகுப்பில புத்தகப்பைய வச்சிட்டு மாவில புடுங்கவும் பூக்கள் ஆயவும் சுத்து வட்டாரத்திலயிருக்கிற வீடுகளுக்கு ரிசுப்பையளை எடுத்துக்கொண்டு வெளிக்கிடுவம். இதிலை முக்கியமான ஆக்கள் ளெண்டால் கிரிசாந்தன், குகன், செல்வன், ரமேஷ், பரந்தாமன் ,குபேரன், பிரதீபன் இப்பிடிக் கொஞ்சப்பேர் இருந்தவங்கள். இவங்களோட நானும் வெளிக்கிடுவன் . இதுக்குள்ள நானும், சாந்துவும் (கிரிசாந்தன்) குக்கறும் (குகன்) பிரதியும் (பிரதீபன்) தான் நெருங்கின சிநேகிதம். மற்றவங்கள் வேற வேற கிளிக்காயிருப்பாங்கள். அப்ப பள்ளிக் கூடத்துக்கு யூனிபோம் போட்டுக் கொண்டு போகவேணுமெண்ட கட்டுப்பாடு ஏதுமிருக்கேல்ல, நாங்கள் என்ன கலர் காச்சட்டை, சேட் போட்டாலும் பள்ளிக்கூடத்தில ஒண்டும் கேக்காயினம். அதால எங்களுக்குப் பள்ளிக் கூட யூனிபோமெண்ட பிரச்சினையே இருக்கேல்லை.

01

நாங்கள் எல்லா இடமும் சுத்திச் திரிஞ்சு பூவாஞ்சு கொண்டு வந்தாப் போலை தான் நவராத்திரிப்பூசை தொடங்கும். தச்சந்தோப்புப் பிள்ளையார் கோவில் ஐயரின்ரை மகனும் அப்ப மாணிக்கவாசக வித்தியாலயத்தில தான் படிச்சவர் பத்துநாளும் அவர்தான் பூசைசெய்வார். அவரின்ரை பெயர் பிரபாகரன். அவர் தான் முதல்ல யாழ்ப்பாணத்தில் டபிள்ஐ. எஸ் (iis) எண்ட பெயரில் கொம்பியூட்டர் சென்றர் நடத்தினதிலையொறாள். பிறகு நெல்லியடி சயன்ஸ் சென்றர் ஒழுங்கைக்குள்ள அந்தக் கொம்பியூட்டர் சென்றரை நடத்தினவர். நவராத்திரிக்கு ஒவ்வொருநாளும் சிவகாமி ரீச்சர்தான் சகலகலாவல்லிமாலை பாடுறவா . அவா பாடி முடிக்க நாங்களெல்லாம் சேர்ந்து பாடுவம். சிவகாமி ரீச்சர் சாமியன் அரசடியிலயிருந்து வாறவா, அவவின்ர மனிசன்காரன் அவவைச் சைக்கிள்ள ஏத்திக்கொணந்து விட்டுட்டுப் போவார்.

அவரை நாங்கள் செந்தியப்பா எண்டு சொல்லுவம். சிவகாமி ரீச்சரின்ரை பேரன் ரமணிதரனும் எங்களோடதான் படிச்சவன். சிவகாமிரீச்சர்தான் அப்ப அஞ்சாம் வகுப்பு ஸ்கொலசிப் சோதனைக்குப் படிப்பிக்கிறதில வல்லுபேமஸ், அவவிட்டப் படிச்சும் நான் அந்தச்சோதினையில பாஸ் பண்ணேல்ல எண்டது வேறகதை. சிவகாமி ரீச்சரோட சேர்ந்து சகலகலாவல்லிமாலையைப் பாடினதால நான் இப்பவும் பத்துப்பாட்டையும் கண்ணை மூடிக்கொண்டு பாக்காமல் பாடுவன். அப்ப நவராத்திரிக்கு அவலும் வடையும், கௌபியும் தான் குடுப்பினம். 1990 காலகட்டத்துக்குப் பிறகு கௌபிக்கு ஒரு பெருந்தட்டுப்பாடு வந்திச்சுது. ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரையாம் எண்ட கணக்கில் கௌபிக்குப் பதிலா இந்தியன் கடலை வந்து சேந்து இண்டைக்கு கௌபியை கண்ணால காணாமலாக்கிப்போட்டுது. இப்பத்தைய ஆக்களுக்கு கௌபி நவராத்திரிக்குப் படைக்கிறதெண்டு சொன்னால் புதுமையாயிருக்கும். எல்லாங்காலத்தின் கோலம்


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்




**அ. ஜடோன்,**
தரம் - 1 சி
யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி.




**அ.யே.கிஷானியா**
தரம் - 7
வதிரி இருதயக்கல்லூரி,
கரவெட்டி.



**V.டிஷானுஜன்**
தரம் - 8
யா/ இணுவில் மத்திய கல்லூரி.



**கோ.நேருகா,**
தரம் - 7
'அ' பகுதி
தேவிபுரம்



**றோ.ஜசிந்தா,**
தரம் - 9
யா/ பண்ணத்தரிப்பு
றோ.க.த.க. பாடசாலை




**பி.றனுயன்**
தரம் - 11 C
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



**யு.ர.திபோிநாத்.**
தரம் - 9
யா/இந்துக் கல்லூரி.

## குறும்பா

எனக்குப் பிடித்தது சோறு
பழத்தில் எடுத்தேன் சாறு
அதனைக் குடித்த நானும்
எனது அண்ணனும்
கோபத்தால் கொண்டோமே வீறு

பீர்பால் பாடினார் பாட்டை
பரிசாக கேட்டார் நோட்டை
அரசன் அடித்த அடியால்
முதுகு பெரிதும் வலிக்க
விட்டுச் சென்றார் நாட்டை

கந்தன் சென்றான் காடு
காட்டில் கண்டான் வீடு
காட்டில் வீடா என
யோசித்த அவன்
உள்ளே சென்று பார்த்தான் கூடு

**ப.கரிஸ்சாய்**
தரம் - 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

**மாணவர்களே!**

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org